சுதேசமித்திரன்

18—7—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
:: நன்கு பாதுகாக்கிறது ::

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

1-WW 111-111

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

சக்தி ஆரூடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறார்:—

"தாங்கள் எனக்கு மேமீ 27-ந் தேதியிலிருந்து ஜூன்மீ 3-ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.



உங்கள் எதிர்காலம்



பணமில்லைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ, 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

Astrologer & Journalist, MADRAS 5.

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40—நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,

26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P.B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

தி ஜெயபாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ் : பம்பாய்)

★

மதராஸ் டிவிஷன் ஆபீஸ்:

"கெய்த்னெஸ் ஹால்" 310-311, லிங்கி செட்டி தெரு, மதராஸ்.

★

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	.....	ரூ. 1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	.....	ரூ. 50,00,000
ஐவேஜிகள்	.....	ரூ. 50,00,000-க்குமேல்

ஆயுள், தீ, கப்பல் & மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு முதன்மை ஸ்தானம் வகிக்கும் தேசீய ஸ்தாபனம்.

தமிழ்நாடு பூராவுக்கும் நல்ல கமிஷன் விகிதங்கள்பேரில் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் தேவை.

உடனே விண்ணப்பம் செய்க:

K. K. ஐயங்கார், டிவிஷன் மானேஜர்,
தபால் பெட்டி நெ. 240, மதராஸ் 1.

அல்லது

ஸ்ரீ S. R. ஸ்ரீனிவாச ஐயங்கார்,
மதுரை, ராமனுதபுரம் & திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு ஆர்கனைஸிங் செக்ரடரி, 4, மதனகோபாலஸ்வாமி தெரு, மதுரை.

ஸ்ரீ A. R. வெங்கடரமணன்,
ஏஜன்ஸி ஆர்கனைஸர், 19, காடிகானு சந்து தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினுப்பள்ளி.

ஸ்ரீ N. ரங்கநாதன்,
இன்ஸ்பெக்டர் **C/o** மீனுக்ஷி லாட்ஜ் சேலம்.

ஸ்ரீ E. R. கிருஷ்ணன்,
ஏஜன்ஸி ஆர்கனைஸர் எலபுள்ளி போஸ்டு, பாலக்காடு

அல்லது

ஸ்ரீ T. E. ராகவாச்சாரி பி. ஏ. பி. எல்., ஏஜன்ஸிகள் சூப்பரின்டெண்டு,
செங்கற்பட்டு, சித்தூர் & வடாற்காடு ஜில்லாக்களுக்கு,
1/28, எட்வர்ட் எல்லியட் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

15-8-1948 ல் முதல் சுதந்திர ஆண்டு விழாவை

சிறப்பாகக் கொண்டாடுங்கள்.



பெரிய அளவில் சிறந்து விளங்கும் மகாத்மா காந்தியின் உருவப் படம்.

பட்டுத் துணியில் வெவ்வேறு அழகான கெட்டி கலர்களில். நவீன புகைப்பட முறையில், நூதனமாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

பிரார்த்தனை, பொது கூட்டங்கள் பொது ஜன. தனிப்பட்டவர்கள் கட்டிடங்களுக்கும், தேசிய கொண்டாட்டங்கள். திருவிழாக்கள், வணக்கம் செலுத்துதல் இதர விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்

அளவு 45" x 70"

விலை ஒன்றுக்கு ரூ 27-8-0

பிரபல பட்டு தேசிய கொடிகள்

அளவு	நெ.	விலை	அளவு	நெ.	விலை
2½" x 1½"	A	ரூ. 0—0—9	3' x 2'	E	ரூ. 10—0—0
6" x 4"	B	ரூ. 0—4—0	6' x 4'	F	ரூ. 25—0—0
9" x 6"	C	ரூ. 0—8—0	9' x 6'	G	ரூ. 50—0—0
18" x 12"	D	ரூ. 1—8—0	12' x 8'	H	ரூ. 90—0—0

ரூ. 10-ம் அதற்கு மேற்பட்ட ஆர்டர்களே ஏற்றுக்கொள்ளப்படும் முழு பணத்துடன் வரும் ஆர்டர்களே முதலில் கவனிக்கப்பட்டு இந்தியாவில் எந்த இடத்துக்கும் தபால் செலவின்றி அனுப்பப்படும். வி.பி. யில்] அனுப்புவதற்கு தபால் செலவு பிரத்யேகம்.

சரக்குகளை விரைவில் பெற இன்றே உங்கள் ஆர்டரை அனுப்புங்கள்.

ஹிந்துஸ்தான் பேப்ரிக்ஸ்,
தபால் பெட்டி நெ. 5, குடியாத்தம்
தென்னிந்தியா.

தந்தி 'HINDFABRIC' Gudiyatam,

கிளை: 246, பூந்தமல்லி ஹைரோடு பெரியமெட்டு, சென்னை.

இந்தியாவின் புகழ்

லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

மலபார், கொச்சி,
திருவாங்கூர்
தென் கன்னடத்துக்கு
ஏஜண்டுகள் :

கொச்சி மெடிகல் ஸ்டோர்ஸ்
மட்டஞ்சேரி (கொச்சி)

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

'மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

வாரியர் பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர் கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936.)

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

விக்டரி பாம்



சக்தி வாய்ந்த அற்புதமான மருந்து, முடக்கு வாதம், கீல் வாதம், பிடிப்பு பல்வலி, பலவித சரும நோய்கள் அனைத்தும் குணமாகும். நன்றாக நீர் இறங்காமல் அவஸ்தைப்படுவோருக்கு தொப்புளைச் சுற்றி ஒத்தடம் கொடுத்தால் சரிப்படும். விலை புட்டி ரூ. 1—8—0.

தேசபந்து ஹர்பல்ஹோம்

Deshbandhu Herbal Home
7, Ganga Prasad Mukerji Road,
Bhowanipore Calcutta 25.

ஸாயி கவசம்

(உத்தரவாதம் பெற்றது)

பரீக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம், காதல் இவை வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம், ஞானம் இவை விருத்திக்கும், ஆரோக்யம், சுகம், சம்பத்து கைகூடுவதற்கும் இன்றியமையாதது. பூஜை செய்தனுப்புவதால் ஜன்ம நக்ஷத்திரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. பலனில்லையேல் பணம் வாபீசு. விலை ரூ. 3-8.

ஸ்பெஷல் ரூ. 10. தபால் செலவு உள்பட. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

ஸாயி ஜோதிடர் ஸாயி ஆஸ்டிரல் ஸ்டூடியோஸ், உறையூர் - திருச்சி

ஸ்ரீ சாயிநாதய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ.	5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,,	1.
விவாக பொருத்தம்பார்க்க	,,	3.
ஆயுள் பலன் எழுத	ரூ.	100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

தந்தி விலாசம்: "சுகந்தம்."

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த
"3001" ஜவ்வாது பத்திகள்
இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த
"301" ஜவ்வாது பத்திகள்
நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த
"31" ஜவ்வாது பத்திகள்
ஆரோக்கிய வாழ்விற்கு
"ஆஸாத்" பாக்கட் பத்திகள் &
"ஆசாத் ஹிந்த்" குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,
நெ. 39, லெக்ஷிமிபுரம், 6-வது தெரு, மதுரை.
பிராஞ்சு:— நெ. 147, பழையபூ கஸ்ஸாய் ரோடு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷிமி பிரசாதம்
(லெப்பர் கியூர்)
18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை. வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்
40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ். | லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

Lovely long hair

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St,
Royapuram, Madras.

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆடி மீ 3௳ ★ 1948-௵ ஜூலை மீ 18௳ No. 25

வீண் பேச்சு

இம்மாகாணத் தொழில் பெருக்கில் நாட்ட முள்ள பல பிரமுகர்களைக் கொண்ட மகாநாடு ஒன்று சமீபத்தில் நமது தொழில் மந்திரி தலைமையில் நடந்தது. தொழில் துறையில் இம்மாகாண சர்க்கார் கொண் டுள்ள அக்கறையின் ஒரு அறிகுறி என்ற முறையில் இம்மகாநாடு வரவேற்கத்தக்கதே. ஆனால் இது மிக வெற்றிகரமாக நடந் தேறிவிட்டதாக யாராவது உற்சாகப் படுவதாயிருந்தால், அந்தக் குதூகலத்தில் நாம் பங்கு கொள்வதற்கில்லை. அபிவிருத்தி செய்யவேண்டிய தொழில்களைப்பற்றி அதில் பலர் குறிப்பிட்டது உண்மையே. ஆனால் முடிவென்ன? ஒன்று அத்தகைய தொழில்கள் இம்மாகாணத்துக்கு மிகவும் அவசியந்தான் என்பது; இன்னொன்று அவைபற்றிய அம்சங் களை மேற்கொண்டு ஆராய்ந்தாக வேண்டு மென்பது. உண்மையில் இத்தகைய முடிவு களுக்கு வர இவ்வளவு பேச்சும், விவாதங் களும் அவசியந்தானா?

தற்போதைய நிலைமையில் இத்தகைய மகாநாடுகள் வீணில் முடிவது இயற் கையே. தொழில் துறையில் அபிவிருத்தி காண சர்க்கார் இதுவரை எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொண்டும் உருப்படியான பலன் கிட்டவில்லையென்று மந்திரியே ஒப்புக் கொண்டார். ஏன் பலன் கிட்டவில்லை? இதற்கான காரணங்கள் பல. அவற்றில் முக்கியமானது தொழில் துறையில் அக்கறை யுள்ளவர்களுக்கு ஊக்கமளிக்கக்கூடியவாறு மத்திய சர்க்காரின் வேலை முறை தெளிவாக அமையாததே. தொழில் துறையில் முன்பு காங்கிரஸ் வாதிகள் வெளியிட்டுவந்த கொள் கைகள் அனைவரும் அறிந்தவைதான். மத்தி யில் ஆட்சிப் பொறுப்பு கைமாறியதன் பேரில் அக்கொள்கைகளையொட்டி பல தொழில்களை சர்க்கார் எடுத்துக்கொண்டு விடுவரோ என்று பல்வேறு தொழில்களில் ஈடுபட்டோர் கலங்கினர். பின்னர் பண்டித நேரு வெளியிட்ட விளக்கம் அக்கலக்கத்தை ஓரளவு தணித்ததாயினும் மறுபடி தொழிலா ளர் பிரச்னைபற்றி அந்த இலாகா மந்திரி பேசத் தலைப்பட்டவகை வேறு. இன்று தொழில் துறையில் ஈடுபட்டவர்களிடை யுள்ள உணர்ச்சி வெட்டவெளிச்சம். அவர்கள் மேற்கொண்டு தொழில்களை விஸ் தரிக்கவோ புதிய தொழில்களை ஆரம்பிக்க வோ ஊக்கம் பெறாதது மட்டுமில்லை. உள்ள தொழில்களின் நிலையும் என்னாகுமோ என்று அஞ்சுவது கண்கூடு. பங்கு மார்க்கெட்டின் தற்போதைய நிலவரத்தைத்தவிர இதற்கு வேறொரு ருசுவும் தேவையில்லை. பல முதல் தரமான கம்பெனி பங்குகளின் மதிப்புக்கூட மிக்கச் சரிந்துவிட்டது. இன்னும் சரிந்து கொண்டிருக்கிறது. நிச்சயமற்ற நிலைமை நீடித்து வருகிறது. இதற்கு முக்கிய கார ணம் போடும் முதலுக்குத்தக்க லாபம் கிடைக்க வழியில்லை என்ற அச்சம் பரவி வருவதே.

இந்த சூழ்நிலையில்தான் சென்னை மகாநாடு கூடியிருக்கிறது. அகில இந்தியத் திட்டத் துக்கு ஒத்தவாறு இம்மாகாணத்தைப் பொறுத்த தொழில் வளர்ச்சிக்குள்ள சாத் திய-சாதனங்களை ஆராய்வது இதன் கருத்து. இத்துறையில் ஸகல சர்க்கார் கையாளும் வேலை முறையின் மூலம் பொதுவாகத் தொழில்களில் ஈடுபட்டவர்களின் அச்சத் தைத் தணிக்கவும், புதிய தொழில்களை ஊக்க வும் ஓரளவேனும் உதவக்கூடும். ஆனால் அவர்கள் தற்போது கையாளும் முறையின் விளைவு முற்றிலும் வேறு. உதாரணமாக தொழில் தகராறுகளில் அவர்களது நடை முறையென்ன? நியாயம் ஒன்றையே முக்

—அடுத்த பக்கம்



தேச நிர்வாகப் பளுவை ஒரு சில நிமிஷமேனும் மறந்து பொழுதுபோக்க விரும்புவது இயற்கைதானே? ஆனால் இதற்கு அவகாசம் ஏது? இல்லையென்றாலும் எப்பொழுதாவது அதற்கான அவகாசத்தை ஏற்படுத்திக்கொண்டு பாட்மிண்டன் விளையாடியிருக்கின்றனர் பண்டித நேரு கோஷ்டியார். ஸ்ரீமான்கள் வி. பி. மேனன், கோபாலஸ்வாமி ஐயங்கார் இவர்களோடுநேருவும், ஸர்தார் பலதேவ் ஸிங்கும் பந்தாடி ஜெயித்தார்கள் சமீபத்தில்.

கியமாகக்கொண்டு அவற்றைத் தீர்ப்பதில் ஆரம்பத்திலிருந்தே அவர்கள் உறுதி காட்டியிருந்தால் இவ்வளவு தகராறுகள் தொடர்ந்திருக்குமா என்பது சந்தேகம். அதற்கு மாறாக வேறு காரணங்களுக்கு அளவுக்கதிகமான முக்கியத்வம்கொடுத்து அதற்கொத்தவாறு அத்தகராறுகளைத் தீர்க்க முற்பட்டதாலேயே அவை மேன்மேலும் புற்றீசல் போல் பெருகிக்கொண்டிருக்கின்றன. பொதுவாக தொழில்களில் உற்பத்திப்பெருக்குக்கு அவசியமான நிர்வாகிகள்—தொழிலாளர் நல்லுறவு சீர்கெட்டு வருகிறது. இந்த நிலையில் தொழில் வளர்ச்சியில் முனைவதில் எங்கும் ஊக்கம் காணவில்லையானால் அதில் வியப்பேது?

தொழில் வளர்ச்சித்திட்டங்கள் பலவும் இன்னும் ஏட்டளவிலேயே இருந்து வருவதற்கு வேறு காரணங்களும் உண்டு. புதிய தொழில்களுக்கு அத்தியாவசியமான விசை முதலிய சாதனங்கள் கிடைப்பதையோ, அத்தொழில்களின் வளர்ச்சிக்கு சர்க்கார் வசதிகள் செய்து கொடுப்பதையோபற்றி இதுவரை திட்டமான தகவல்களில்லை. இந்த நிலைமையில் கூடும் ஒரு மகாநாட்டில் உருப்படியான யோசனைகள் வெளியாவது எங்ஙனம்? நாமனைவரும் கோரும் முறையில், பலவகையான தொழில்களும் துரிதமாக வளர்ச்சியடைய வேண்டுமானால், முதலில் மேற்குறித்த அடிப்படையான விஷயங்களில் சர்க்காரின் நிலைமை தெளிவுபட வேண்டும். குறிப்பாக தொழில் துறைகளில் முனைவோருக்குத் தங்கள் முயற்சிக்குத் தக்க பலனுண்டு என்பதில் சிறிதும் சந்தேகம் இருக்கவிடக்கூடாது. அத்தகைய நிலைமை ஏற்படுமானால் புதிய தொழில்கள் பெருக வேண்டுமென்ற நோக்கம் வலுப்பெற்று முயற்சியும் வளர்ந்தோங்கும்.



சமீபத்தில், மிடில் ஸெக்ஸ், ஹார்பீல்டில் 'யார்க்' என்ற பிரயாணிகள் விமானம் ஸ்வீடிஷ் விமானமொன்ேறாடு மோதி இரண்டும் நொறுங்கின. 39-பேர் மாண்டனர். நொறுங்கி விழுந்த மேற்படி இரண்டு விமானங்களையும் படத்தில் காண்க.

லக்ஷ்மி ரோட்

எல். வி. எஸ். மணியன்

பெயர் என்னவோ பெரிய பெயர் தான். (நீளத்தில் இல்லை) 'பூனா' 'பூனா' வென்று அப்படி இருக்குமாக்கும், இப்படி இருக்குமாக்கும் என்று வெளி ஊர்களில் இருப்பவர்கள் கற்பனை செய்துகொண்டு 'பூனா' நகரைப் பற்றிப் பிரமாதமாக எண்ணுவதில் வியப்பு ஒன்றுமில்லை,

"நாலு சுவர்களையும் பார்த்துக் கொண்டு உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டியிருக்கு" என்று 'புகார்' கிளம்பும் மனைவியிடமிருந்து, இதைக் கேட்க 'ஐயோ! பாவம்' என்று தான் எண்ணத் தோன்றும். அகத்துக்காரர் ஆபீஸிற்குப் போனதும் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு நிம்மதியாக மணிக்கணக்காக வம்பளப்போம் என்பது முடியாது. இவ்வூரில் பட்டப்பகலில் கதவைப்பூட்டிக் கொண்டு போனாலும் 'பக்' 'பக்' என்று மனம் அடித்துக்கொள்ளும். காரணம், பூட்டப்பட்டிருக்கும் வீடுகளின் மேல் கண் வைத்துக்கொண்டு, அவ்வீடுகளிலுள்ள சொத்துக்களையே ஜீவனோபாயமாகக் கொண்டு ஒரு கும்பல் வசிப்பதே. இதனால் நடுப்பகலில் கூட வீட்டிலேயே தான் அநேகமாக ஸ்திரீகள் அடைந்து கிடக்கவேண்டிவரும். ஆகவே மாலை வேளைகளில் ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி, கால் ஆர உலாவச் சென்றால் தான் மனத்திற்கு சந்துஷ்டியாயிருக்கும்.

குஷியாகப் 'பார்க்'குக்குப்போனோம். ('பீச்' என்பதற்கு கடற்கரையிலுள்ளநகரமல்லவே)சிறிது நேரம் 'ரேடியோ' கேட்டுவிட்டு வந்தோம் என்பது முடியாது இங்கே. இந்த இருபதாம் நூற்றாண்டிலும், மாலையில் பொழுது போக்க, பொதுவான இடம் ஒன்று கூட கிடையாது.

இந்தக் குறையைப் போக்குவது 'லக்ஷ்மி ரோட்.' சுமார் ஒரு மைல் நீளமுள்ள, 'க்வார்டர் கேட்'டிலிருந்து 'லக்டி புல்' வரை செல்லும் இந்த ரோட்டை பூனாவின் முதுகெலும்பு, ஜீவநாடி, என்றே சொல்லவேண்டும் 'சைனா பஸார்' இல்லாத மதராஸ்போலத்தான் லக்ஷ்மி ரோட் இல்லாதுபோனால் பூனா. அதற்காக நிரம்பவும் பிரமாதமாக எண்ணிக்கொண்டு விடக்கூடாது. நீளமாக இல்லாத கூந்தலை, ஒரு சாண் அளவுக்கு தோளில் வந்து புரளும்படி கத்தரித்துவிட்டுக்கொள்ளும்,அளவுக்கு நாகரீகம் அடையாத பெண்மணிகள், சவுரியை வைத்து நீளமாக்கி அக்குறையைப் போக்கிக்கொள்வதுபோல என்று சொன்னால் தான் பொருத்தமாக இருக்கும். இந்த ரஸ்தாவில் மாலை சுமார் ஆறரை மணிக்கு இக்கோடியிலிருந்து, அக்கோடிக்கு ஒரு தடவையாவது நடந்துவிட்டு வந்தால்தான் மனசு மனசாக இருக்கும். இல்லாவிட்டால் பித்து பிடித்து விடும்.

மணமானவர்களும், மன சந்துஷ்டிக்கு இங்கு வருவார்கள். சௌந்தர்யமுள்ள கொஞ்சம் படிக்கவும் படித்த பெண்களை மனைவியாய் அடைந்துவிட்டால் போதுமா? நம் இஷ்டப்பிரகாரம் 'ரவிக்கை' தைத்துக் கொடுத்தோம், 'புடவை' வாங்கிக் கொடுத்தோம், அதை அவர்கள் அணிந்துகொண்டார்கள். கண் குளிர நாம் பார்த்து அனுபவித்தோம் என்றகாலமா இது? எதற்கெடுத்தாலும் 'சுதந்திரம்' என்னும் யுகமாயிற்றே! எங்கள் இஷ்டப்படி, புடவை, ரவிக்கை அணிந்துகொள்ளக்கூட, எங்களுக்கு, சுதந்திரமடைந்துவிட்ட இந்தியாவில் 'சுதந்திரம்' இல்லையா? என்று ஸ்திரீகள் உரக்கக் கேட்கும் நூற்றாண்டல்லவோ இது? 'தேவிகா ராணி' எந்த மாதிரி டிரஸ் செய்து கொள்ளுகிறாள் 'வசந்தா' எதுபோல 'டோலக்'போட்டுக்கொண்டிருக்கிறாள் என்று சினிமா பார்த்துவிட்டு வந்து, அதுபோல தாங்களும், சிங்காரித்துக்கொண்டு 'சினிமா ஸ்டார்கள்' என்று கனவு காணும் 'புதுமைப் பெண்'ணின் சகாப்தமல்லவா இது? ஆகையால் மனைவியருடன் வீணில் வாக்கு வாதம் செய்து சச்சரவிடாமல், சலாம் கிலாம் போட்டுக்கொண்டு சௌஜன்யமாக குடும்பத்தை நடத்திக் கொண்டு போகும் தற்கால கணவன்மார்கள் "நம் விருப்பத்திற்கிணங்க அலங்காரம் செய்துகொண்டு மகிழ்விக்கும் பெண்ணை மனைவியாகப் பெறத்தான் கொடுத்துவைக்கவில்லை. மற்ற ஸ்திரீகள் விதம் விதமாக கவர்ச்சியாக ஆடை அணிந்து செல்வதையாவது பார்த்துப் பரவசமாவோம், என்று லக்ஷ்மிரோட்டில் உலாவுவதைக் காணலாம்.

நாலு கஜம் வேஷ்டியோடும், முழுக்கை சட்டையோடும், மிஞ்சினால் சாதாரண 'புல் சூட்'டோடும் வரும் தங்கள் கணவரோடு ஐந்து கஜம் 'பெங்கால் ஸில்க்' புடவை அல்லது கொள்ளேகால் பட்டுப் புடவை உடுத்தி, 'பாரசூட்' ரவிக்கை அணிந்து விதம் விதமாக புதுப்புது மோஸ்தரில் தங்க நகைகள் போட்டுக்கொண்டு, கணவரின் அந்தஸ்திற்கு தாமே எடுத்துக்காட்டாக செல்லும் தென்னிந்தியப் பெண்களைப் பார்க்கலாம் லக்ஷ்மி ரோட்டில்.

சாதாரண மில் புடவையை சுத்தமாகத் துவைத்துக் கட்டிக்கொண்டு, நிரம்பவும் பகட்டாக இல்லாத ரவிக்கை அணிந்து, காதிலும், கழுத்திலும், மூக்கிலும், கைகளிலும் தங்கத்தை உருட்டிப் போட்டுக்கொள்ளவில்லையே என்ற வருத்தமில்லாமல் அநேகமாக ஒரு அணா மல்லிகைப்பூகூட கூந்தலில் இல்லாமல் உள்ளத்திலுள்ள குதூகலம், வதனத்தில்



பிரதிபலிக்க இழுத்து மூடிக்கொண்டு நாணிக்கோணிக்கொண்டு செல்லாமல், கலகலப்பாக சங்கோஜமின்றி சிரித்துப் பேசிக்கொண்டு நடந்தும், சைக்கிளிலும் செல்லும் துணிச்சல் மிகுந்த மகாராஷ்டிரப் பெண்டிரைக் காணலாம் இந்த ரஸ்தாவிலே.

இத்தகைய எனக்குப் பழக்கமான பல காட்சிகளைப் பார்த்துக்கொண்டே ரே மார்க்கெட்டுக்குப் போய்க்கொண்டிருந்தேன். 'ஸிடி போஸ்டாபீஸை'த் தாண்டிச்சென்று கொண்டிருந்தபோது எனக்கு எதிரில் இருவர்—ஆணும், பெண்ணும் - போய்க்கொண்டிருந்தனர். ஹிந்தியில் நடந்தது அவர்கள் சம்பாஷணை. இதற்குமுன் அவர்கள் குரலை எங்கோ கேட்ட ஞாபகம். பழக்கப்பட்ட பேச்சு. பல தடவை இக்குரலை கேட்டதாக காதுகள் சொல்லின. 'நெஞ்சிலிருக்கிறது. வாயில் வரவில்லை! என்பதுபோல அவர்கள் குரலை எங்கு கேட்டோம்? யார் இவர்கள்? என்று சட்டென்று ஞாபகத்திற்கு வரவில்லை. ஆகவே, கிணற்றில் விழுந்து விட்ட பாத்திரத்தைப் பாதாள கரண்டி (கொலுசு)யால் துழாவித் துழாவி எடுப்பது போல, மன வாவியில் எங்கோ புதைந்து போயிருந்த இப்பழைய குரலை தெரிந்துகொள்ள எண்ணி அவர்கள் சம்பாஷணையைக் கவனமாகக் கேட்டுக்கொண்டு பின்னாலேயே சென்றேன்.

சம்பாஷணையிலிருந்து ஆடவர் காந்தியத்தை பின்பற்றுகிறவர் என்றும், பெண்ணழகி தீவிரவாதி என்றும் தெரிந்தது ரஸாக்கர்கள் 'மதராஸ் மெயிலை' தாக்கினதைப் பற்றி அவர்கள் பேச்சு நடந்தது. மிகவும் சுடச் சுட, ஆக்ரோஷத்தோடு, வீரம் நிரம்பி ஒவ்வொரு சொல்லும் 'அவள்' வாயிலிருந்து வந்தது. தன் சாத்வீகமான, சாந்தம் நிரம்பிய குரலில், மிகவும் அமைதியாக, அவளது ஒவ்வொரு கூற்றுக்கும், நிதானமாக, சமாதானம் சொல்லி, அவள் தாக்குதலை தகர்த்துவந்தார் அவர். கேட்க ரசமாகத்தான் இருந்தது அவர்கள் தர்க்கம்.

"ஆண்கள் என்று சொல்லிக் கொள்வானேன்? கையைக் கட்டிக்கொண்டு, பெண்டிர் கடத்திச் செல்லப்படுவதை, மான பங்கம் செய்யப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்களாம். வெட்கம் கெட்டவர்கள். ஆபத்துக் காலத்தில் தங்கள் ஸ்திரீகளை பாதுகாக்க முடியாதவர்கள் ஆண்களா? என்று படப் படப்பாகக் கேட்டாள் வனிதை.

"காந்திஜீயின் கொள்கைகளைப் பின்பற்றுகிறேன் என்று சொல்கிறாய். ஆனால், உனக்கு இடை இடையே பழைய குணம் வந்து விடுகிறது லீலா............"

"லீலாவா?......நம் லீலாவாக இருக்குமோ? குரலைப் பார்த்தால் சந்தேகமாயிருக்கு. புடவை கட்டிக்கொண்டிருப்பதைப்பார்த்தால் மராட்டிக்காரிபோலிருக்கே! எதற்கும் இன்னும் சற்று கவனிப்போம்" என்று காதைத் தீட்டிக்கொண்டு உன்னிப்பாக சம்பாஷணையைக் கேட்டேன்.

"வீராதி வீரனான ராமனால்கூட சீதை ராவணனால் கவர்ந்து செல்லப்பட்டபோது, தனித்து ஒன்றும் செய்யமுடியவில்லை என்பதை நீ அறியாயா? பலபேர் சகாயத்தால் யுத்தத்தில் ராவணனை வென்றே சீதையை மீட்க முடிந்தது இல்லையா? நீ விரும்புகிறபடி அந்த சமயம் ரெயிலிலிருந்த ஆடவர்களெல்லாம், காந்தி மகானின் உபதேசப்படி நடந்துகொள்ளாமல், மூர்க்கர்களைத் தாக்கியிருந்தார்களானால், என்ன நடந்திருக்கும் என்பதைத்தான் ஒரு பிரயாணி சொல்லியிருந்தானே! நீ படிக்கவில்லையா அதை? இப்பொழுது ஏற்பட்ட சேதத்தைப் போல பன்மடங்கு அதிகமாகியிருக்கும்."

"இம்மாதிரி கோர சம்பவம் கிழக்குப் பாஞ்சாலத்திலோ, வங்காளத்திலோ, நடந்திருந்தால், பஞ்சாபியர்கள், வங்காளிகள்,

சும்மாவா இருந்திருப்பார்கள்? எல்லாவற்றிற்கும், அரசாங்கம், அரசாங்கம் என்றால் அரசாங்கத்தால்தான் என்ன செய்ய முடியும்?

"கவரை தபாலில் போடவேண்டுமென்றாயே! பேசிக்கொண்டே தபாலாபீஸைக் கடந்துவந்துவிட்டோம்" என்று அவர் திரும்பினார். அவளும் திரும்பினாள், தபாலாபீஸில் கவரை அன்றையக் கட்டில் சேர்க்க.

அவள் திரும்பினதும், பின்னாலேயே சென்றுகொண்டிருந்த என்மேல் அவள் பார்வை விழுந்தது. உடனே 'சந்தர்' என்றாள் அவள்.

"லீலி" என்று சந்தோஷம் தாங்க முடியாமல் கூவினேன்.

"நீ இங்கு எங்கே வந்தாய்?"

"சதாராவில் ஒரு கம்பெனியில் ஆறு வருஷமாக வேலை செய்துகொண்டு இருக்கிறேன் லீலி. இங்குள்ள நண்பர்களைப் பார்த்துவிட்டுப் போவோம் என்று வந்தேன். நீ இவ்வூரிலா இருக்கிறாய்? தங்கமணி எங்கிருக்கிறான்? இவர் யார்?" என்று விசாரித்தேன்.

"என் கணவர் இவர், கோகலே" என்று சொல்லிவிட்டு "இவர் கலாசாலை நண்பர் சந்தர்" என்று என்னை தன் கணவருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். லீலி என்று நான் செல்லமாக அழைத்த என் கலாசாலை சிநேகிதி, லீலா என்ற லீலாவதி.

"டைரி"யைப் புரட்டிப் பார்ப்பதுபோல என்மனத்தை ஆறாண்டுகள் பின்னோக்கிப் புரட்டினேன். நான் கலாசாலையில் பி. ஏ. யில் படித்துக்கொண்டிருந்த காலமது. 'பாலிடிக்ஸ்' (அரசியல்) எடுத்துக்கொண்டிருந்தேன். லீலா, கலாசாலைத் தோழி.

கலெக்டர் ராமராவின் அருமைப் புதல்வி அவள். மகாராஷ்டிர தேசத்தைச் சேர்ந்தவள். இருந்தாலும் தென்னாட்டிலேயே இரண்டு தலைமுறையாகத் தங்கிவிட்டதால், மராட்டியைவிட தமிழைத்தான் சரளமாகப் பேச முடிந்தது லீலாவால். காலேஜில் பெண்கள் சங்கத்தின் காரியதரிசி அவள். நான் மாணவர்கள் சங்கத்தின் காரியதரிசி. இதனால் எங்கள் இருவருக்கும் நெருங்கிய சிநேகிதம். 'மீட்டிங்'குகள் ஏற்பாடு செய்வதும், அவரை அழைத்து வந்து பேசச் சொல்லலாமா? இவரைக் கூப்பிடலாமா என்று இருவரும் அடிக்கடி சந்தித்து ஆலோசனை செய்து தீர்மானிப்போம். அரசியல் முதல், பல துறைகளிலும், இருவரும் முற்போக்கு வாதிகளாய் இருந்தது, இருவரையும் இன்னும் அதிகமாக நெருங்கிப் பழகச் செய்தது. அவ்வப்போது, அரசியல் உலகில் நிகழுபவைகளைப்பற்றித் தர்க்க வாதங்கள் செய்வோம்.

இந்திய சரித்திரத்தில் அழியா இடம் பெற்ற 'ஆகஸ்ட் இயக்கம்' எங்கள் கலாசாலையில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது. யுத்த மும்முரத்தில் இந்திய மக்களின் நல்லெண்ணத்தை, உதவியைப் பெறுவதற்குப் பதிலாக, நாட்டின், ஒப்பற்ற, அரும்பெருந் தலைவர்களை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், சிறை செய்தது நாடெங்கும் புத்துணர்ச்சியைத் தூண்டிவிட்டது. 'ஆகஸ்ட் புரட்சி'யை எப்படி நடத்துவது என்று மகாத்மா முடிவான திட்டங்களை வகுக்கும் முன்பே, கைதி செய்யப்பட்டு விடவே, பிரிட்டிஷ்காரர்களை, வெளியேற்ற பொதுஜனங்கள், தங்களுக்குத் தெரிந்த உபாயங்களையெல்லாம் கையாளத் தொடங்கினர். பிரிட்டிஷ்காரர்களுக்கு அரசாங்கத்தை நடத்த முடியாமல் தவிக்கச் செய்து, அவர்கள் நாட்டை விட்டுப் போகச் செய்ய வேண்டுமென்பதே எல்லோருடைய அபிலாஷையும். ஆகவே அரசாங்கத்திற்குத் தொந்தரவு கொடுப்பதற்கு, தந்திக் கம்பிகளை அறுக்க வேண்டும், லாந்தர் கம்பங்களை வீழ்த்த வேண்டும், தண்டவாளங்களை நீக்கி, யுத்தத்திற்கு வேண்டிய தளவாடங்கள் போகாமல் செய்யவேண்டும்" என்று எல்லாம் தாங்களே திட்டம் போட்டுக்கொண்டு, சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கினர்.

எதற்கும் ஒரு அடி முன்னாலேயே நிற்கும் முற்போக்குவாதிகளான லீலாவும், நானும்கையைக் கட்டி சப்பளாங்கூட்டி உட்கார்ந்துகொண்டிருப்போமா? பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கொடூரமான அடக்குமுறைகளைக் கண்டு சகிக்காத எங்கள் சங்கத்தில் இருந்த பல மாணவ, மாணவிகள், எங்களைத் தூண்டியும் விட்டார்கள். கலெக்டர் பெண்ணான லீலா, தன் தந்தையின் வாயை நைஸாகக் கிளறியும், அவரது ஆபீஸ் பேப்பர்களை, அவருக்குத் தெரியாமல் வாசித்தும் பல ரகசியச் செய்திகளை எங்களுக்கெல்லாம் சொல்லி வந்தாள். எங்கள் மனதில் எழுந்த கனலைக் கொழுந்துவிட்டெரியச் செய்தது லீலி கொண்டு வந்த செய்திகள். பம்பாயில் மகாத்மா கைதி செய்யப்பட்ட மறு தினம் மாணவமாணவிகள் எல்லோரும் 'கலாசாலை'க்குப் போகாமல் 'ஸ்டிரைக்' செய்தோம். எங்களுடன் சேராமல், கலாசாலைக்குப் போக விரும்பியவர்களைத் தரையில் படுத்துக்கொண்டு, வழி விடாமல் தடை செய்தோம். திருட்டுத்தனமாகப் பின்புற வழியாகச் சென்ற ஓரிரண்டு மாணவர்கள் நீங்கலாக கலாசாலைக்கு மாணவர்கள் யாருமே செல்ல முடியாமல் செய்துவிட்டோம். விடாமல் இரண்டு மணி நேரம், மாணவர்களோடு காரியதரிசி லீலியும் அவள் சகிகளும்; மாணவிகளோடு ஸ்டிரைக் தலைவர் தங்கமணியனும், நாங்களும் வாக்குவாதம் செய்து கெஞ்சி, மன்றாடி, காலில் விழுந்து கலாசாலைக்குப் போகாமல் தடுத்துவிட்டோம். இவ்வளவு தூரம் நடந்த பிறகு 'பிரின்ஸிபால்' சும்மா இருப்பாரா? அவர் டெலிபோனில் சொல்ல, போலீஸ் படை வந்தது. வந்த படை போலீஸ் 'வான்'னிலிருந்துஇறங்கு முன்பே, எங்கிருந்தோ தோன்றினார்கள் லீலியும், அவள் சகிகளும். ஒவ்வொருவர் மடியிலும் ரோட்டு போட உபயோகிக்கும் "கருங்கல் சல்லி"யைக் கட்டிக்கொண்டு, 'விண் விண்' என்று பறந்தது மலைப்பிஞ்சு. இரண்டு போலீஸ் ஜவான்களுக்கு நன்றாக மண்டையில் அடிபடவே, ஸப் இன்ஸ்பெக்டர் "தடியடி"க்கு உத்தரவு கொடுத்தார். எங்கள் தலைவனான தங்கமணி போலீஸாரால் நன்றாகப் புடைக்கப்பட்டு, இன்னும் ஆறு பேரோடு கைதி செய்யப்பட்டான். இதனால் எங்கள் சினம் ஆத்திரம் பன்மடங்காயிற்று.

கலாசாலை ஒரு வாரம் மூடப்பட்டது. ஊர்வலங்கள் நடத்தினோம். "வெள்ளைக்காரா வெளியே போ" "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வீழ்க" "வெள்ளைக்காரர்களை விரட்டி அடியுங்கள்" என்று கோஷங்களை எழுப்பிக்கொண்டு, "போர்டு"கள் எழுதிப் பிடித்துக்கொண்டு, தெருத் தெருவாக

ஊர்வலங்கள் சென்ருேம். உயர்தர பள்ளி மாணவர்கள், பள்ளி செல்வதை நிறுத்தி, எங்களுடன் சேர்ந்துகொண்டார்கள். எங்களை அடக்குவது பெரிய பிரச்னையாகப் போய்விட்டது போலீஸுக்கு. இந்த "மாணவர்கள் கலாட்டாவை" அடக்குவதற்காக இரண்டு டி. எஸ். பி. கள் நியமிக்கப்பட்டார்கள். ரிசர்வ் போலீஸும், ராணுவப் போலீஸும் கூட தருவிக்கப்பட்டது. இப்படி அரசாங்கம் அடக்குமுறையைக் கையாளக் கையாள, எங்களுக்குக் குஷி அதிகரித்தது. தீவிரமாகப் போராடத் தீர்மானித்தோம்.

தெருக்கள் அதிரும்படியாக, எதிரொலிக்கும்படி கோஷமிட்டுக்கொண்டு ஊர்வலமாகச் செல்வோம். போலீஸ்காரர்கள் எங்களைத் தடுத்து மேலே போகவிடாமல் நிறுத்துவார்கள். நடுத்தெருவில் உட்கார்ந்துகொண்டு சத்தியாக்கிரஹம் செய்வோம். சிலர் போலீஸ் அணிவகுப்பை, உடைத்துக்கொண்டு முன்னேறுவார்கள். அவர்களைத் தொடர்ந்து எல்லோரும் ஓடுவோம். போலீஸ்காரர்கள் தடியாலடிப்பார்கள். நாங்கள் கற்களை வீசுவோம். 'கவண்' கல் எறிவோம். 'உண்டி' வில்லால் அடிப்போம். கொடூரமாகப் போலீஸார் தாக்கினுல் சிதறி ஓடுவோம். போலீஸார் தொப்பி மறைந்ததும் ஒன்று கூடுவோம். மறுபடியும் பழைய படி 'ஊர்வலம்' 'கல்லெறி'. திருப்பித் திருப்பி இதுதான்.

இத்தகைய போராட்டத்தின் போது ஒருநாள் போலீஸாரின் தடி என்னைப் பலமாகத் தாக்கி விட்டது. முதுகில் நல்ல அடி. மூர்ச்சையாகி நடுத்தெருவிலேயே விழுந்துவிட்டேன். ஆஸ்பத்திரியில் மூன்று மாதம் சிகிச்சை பெறவேண்டி வந்தது.

என் முதுகில் விழுந்த அந்த பலமான அடி, என் மனதை நாளடைவில் குழப்பிக்கொண்டிருந்தது. "ராஜாஜி"யும், மற்றும் சிறை புகாமல் வெளியிலிருந்த காங்கிரஸ் தலைவர்களும், தந்திக் கம்பிகளை அறுக்கக் கூடாது, தண்டவாளங்களைப் பெயர்க்கக்கூடாது என்று அடிக்கடி விடுத்து வந்த செய்தி என் மனதை மாற்றத் தொடங்கியது.

அடிக்கடி ஆஸ்பத்திரியில் வந்து பார்த்து என் உடம்பு நிலைமையை விசாரித்துப் போவாள் லீலா. அவளிடம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மனம் தளர்ச்சியடையாமல் இருக்கிருர்களா? எவ்வளவு இடங்களில் "கல்லெறி" நடந்தது? போலீஸ் தடியடிக்கு யார், யார் ஆளானுர்கள்? "டியாகாஸ்"ஸை (கண்ணீர் புகை) போலீஸார் உபயோகித்தார்களாமே" என்று எல்லாம், எங்கள் "முனை"யைப் பற்றிய செய்திகளை நான் கேட்டுத் தெரிந்துகொள்வேன். என்னை ஒரு தடவை ஆஸ்பத்திரியில் சந்தித்தபோதுதான் லீலி, ரயிலைக்கவிழ்த்ததைப்பற்றி விவரமாகச் சொன்ஞள்.

லீலி தன் தந்தையிடமிருந்து பிரிட்டிஷ் சோல்ஜர்கள் அடங்கிய ஒரு ரெயில் வண்டி எகிப்திற்குச் செல்வதற்காக, பம்பாயில் கப்பல் ஏறப் போவதாகத் தெரிந்துகொண்டாள். அந்த வண்டி முழுவதும் சோல்ஜர்கள் (இந்திய சிப்பாய்கள் அல்ல) தானும். அதைக் கவிழ்த்துவிட வேண்டும் என்று திட்டம் வகுத்தாள். எங்கள் ஊரிலிருந்து ஐந்து மைல்களுக்கு அப்பால் காட்டாற்றைக் கடப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் பாலத்தில், இருப்புப் பாதையிலுள்ள ஒரு 'பிஷ்-ப்ளேட்'டை நீக்கிவிடுவது, காட்டாற்றில் ரெயில் கவிழ்ந்துவிடும் என்று திட்டம் போட்டாள். அவள் தலைமையில் சுமார் இருபது மாணவர்களும், மாணவிகளும் இந்த 'முனை'யில் வேலை செய்தார்கள். 'பிஷ்-ப்ளேட்' எவ்விதத் தடங்கலுமின்றி நீக்கிவிடப்பட்டது. ரெயிலும் வந்தது. கவிழவும் கவிழ்ந்தது. இதை மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த லீலியின் சேனை கண்டதோ சோல்ஜர்கள் இந்த விபத்துக்குள்ளாகாததே!

குழந்தை, குட்டிகளும், பெண்டிரும், வயோதிகர்களும், யுவரும், யுவதிகளும் இவ்விபத்துக்காளாஞர்கள். 'ஓ' என்ற கூக்குரல். லீலி ஸ்தம்பித்துப் போஞள். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது! அவளொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது. அந்த ஜங்ஷனில் துருப்புவண்டியை அன்று இரவு முன்பின் திட்டம் போடாமல் நிறுத்தி விடுவார்கள் என்பதைக் கண்டாளா லீலி? இந்தத் துருப்பு வண்டி வந்த பிறகுதான் அந்த மெயில் வரும், முன்ஞடியே துருப்பு ரெயில் விபத்திற்குள்ளாகி விடுமாதலால், பின்ஞல் வரும் மெயிலை ஜங்ஷனிலேயே நிறுத்திவிடுவார்கள். ஆகவே,

பொதுஜனங்களுக்கு எவ்விதச் சேதமும் ஏற்படாது என்று எண்ணினாள் லீலி. ஆனால் துருப்பு வண்டி பின் தங்கிவிடவே மெயில் வழக்கம்போல வந்து எதிர்பாராமல் சேதத்திற்குள்ளாகியது.

இந்த விபத்தைக் கேட்டபின்னர் என் மனம் முற்றும் மாறிவிட்டது. நாடு சுதந்திரம் அடைய வேண்டும் என்று அந்நியருடன் சாத்வீகப் போர் தொடுத்து, தங்கள் சுகவாழ்வைத் தாங்களே தியாகம்செய்துகொண்டுகாந்திஜி, நேரு முதலியவர்கள் கடுங்காவலுக்கு மறுபேச்சு இன்றி, இணங்க இளமை வெறியில் ஆத்மபலத்தை அஹிம்ஸா யுத்தத்தைப் புறக்கணித்து, குறுக்கு வழியென்று எண்ணிப்போய் காலில் முட்களை தைத்துக்கொள்வது போல ஹிம்ஸையைக் கைகொண்டு ஒரு பாவமும் அறியாத பேதை மக்களுக்கு தீங்கிழைத்தாளே என்று மிகவும் வருந்தினேன். பெண்சிங்கம்போல கர்ஜனை செய்து நிற்கும் லீலிகூட இந்த எதிர்பாராத சம்பவத்திற்குப் பிறகு, உற்சாகம் குன்றிக் காணப்பட்டாள்.

நான் மட்டும் தீர்மானித்துவிட்டேன். லீலி எப்படிப் போனாலும் சரி யார் சொல்லும் கேட்காத 'பிடாரி' அவள். உடம்பு குணமானதும் நாம் அவள் கட்சியில் சேரக்கூடாது. தந்திக் கம்பங்களையும் எலெக்டிரிக் கம்பங்களையும் பெயர்த்து எறிவதாலோ ரெயில் வண்டிகளைக் கவிழ்ப்பதாலோ, பிரிட்டிஷ்காரர்களுக்கு எவ்வித நஷ்டமும் இல்லை. அவர்களுடைய சொந்த கஜானாவிலிருந்து பணத்தை எடுத்து உடைக்கப்பட்ட பாலங்களை செப்பனிடப் போவதில்லை. ரெயில் விபத்துக்காளானகுடும்பங்களுக்கு எவ்வித பண உதவியும் செய்யப் போவதில்லை. ஏழை மக்களைச் சுரண்டித்தான் எல்லா காரியங்களையும் செய்யப் போகிறார்கள். எலக்டிரிக், தந்திக் கம்பங்கள் பெயர்க்கப்படுவதால் அரசாங்கத்தாருக்கு சங்கடம் என்றாலும், அவர்களைவிடப் பன்மடங்கு தொல்லைகளுக்கு ஆளாவது நாம்தான். பொது ஜனங்களே. ஆகவே 'புரட்சி இயக்கம்' என்று அவன் சொன்னான், இவன் சொன்னான் என்று பொறுப்பற்றவர்கள் சொல்லைக் கேட்டுக் கொண்டு கண்டதை செய்யக்கூடாது. ஆஸ்பத்திரியிலிருந்து உடம்பு தேவலையாகி வீடு போனதும், மறுபடியும் கலாசாலையில் சேர்ந்து, ஒழுங்காகப் படிக்க வேண்டும். மாணவர்கள், அரசியல் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது என்ற தலைவர்கள் சொல்லை மீறி நடக்கக்கூடாது என்று மனதைத் திடம் செய்து கொண்டேன். ஆனால் ஆஸ்பத்திரியிலிருந்து என்னை வீட்டிற்கு அனுப்புவதற்குள்ளாகவே கலாசாலையிலிருந்து நீக்கப்பட்டதாகச் செய்தி கிடைத்தது. இதனால் பி. ஏ. கடைசி வருஷம் படிக்காமலே விட வேண்டி வந்தது. என் நடத்தை சரியில்லையென்று காலேஜிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்படவே, சர்க்கார் உத்தியோகத்திற்கும் நான் லாயக்கில்லாதவனானேன்.

இந்த சந்தர்ப்பத்தில், எங்கள் ஊரிலும், அதன் சுற்றுப்புறத்திலும், அமைதி குன்றி, குழப்பம் அதிகரித்து வரவே, கோகலே என்ற காங்கிரஸ் தலைவர், அந்த வட்டாரத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார். காந்தியம் என்பது என்ன? காந்திஜீயின் திட்டம், நோக்கம் என்ன? என்று விளக்கி, வெள்ளைக்காரன் வெளியே போக வேண்டுமென்பதற்காகத் தன்வீட்டிற்குத் தானே தீ வைத்து சாம்பராக்குவது மதியீனமேயன்றி வேறல்ல. வீட்டினுள் நுழைந்த திருடனைத்துரத்த குழந்தையை, அடி அடியென்று அடிப்பவனை புத்திசாலி என்று சொல்ல முடியுமா? இம்மாதிரி பொதுஜனங்களுக்கு தீங்கிழைக்கும், நாட்டின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் போராட்டத்தில் நம்பிக்கையில்லை மகாத்மாவிற்கு.'' என்று எடுத்துரைத்தார். அவருடைய சாதுர்யமான பேச்சையும், காந்திஜியின் அஹிம்சா முறையால், எங்ஙனம், நாட்டின் அடிமை விலங்கைத் துணிக்கக்கூடும் என்று எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாது யாவரும், ஒப்புக்கொள்ளத் தக்க வகையில் விளக்கிச் சொன்னது லீலியின் மனதை மாற்றியது. கோகலேயுடன் சிநேகம் செய்து கொண்டாள். அவருடன் சுற்றுப் பிரயாணமும் செய்தாள். தன் சேனையையும் போராட்டத்தையும், உடனடியாகக் கலைத்தாள். கோகலேயுடன் லீலா கொண்ட நட்பு, காதலாகக் கனிந்து, பின்னர் இருவரும் தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட்டார்கள்.

நான் குறுக்கெழுத்தும், டைப்ரைட்டிங்கும் நன்றாகக் கற்றுக் கொண்டு, பம்பாயில் ஒரு கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தேன். அந்தக் கம்பெனியின் ஒரு கிளையில்தான் சதாராவில் லீலாவை லக்ஷ்மி ரோட்டில் சந்தித்தபோது மானேஜராக இருந்தேன்.

இப்படி சென்ற நாட்களை எண்ணிக்கொண்டு, நடு ரோட்டில் நடக்கிறோம் என்ற நினைப்பேயில்லாமல் லீலியோடு சென்று கொண்டிருந்தபோது "என்ன? மௌன சாமியாராக வருகிறாய்? டாங்காக்காரன் சத்தம் போடுவதுகூட காதில் விழாமல் என்ன அவ்வளவு பலமான யோசனை?" என்று டாங்கா என்மேல் மோதிவிடாமல், தர தரவென்று என் கையைப் பிடித்து இழுத்தாள் லீலி.

"நம் காலேஜ் நாட்களைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டு வந்தேன்" என்றேன்.

"அந்த இன்ப நாட்கள் எங்கிருந்து திரும்பி வரப்போகின்றன?" என்றாள் அவள்.

டெக்கான் ஜிம்கானாவிலிருந்த லீலியின் வீட்டினுள் நுழைந்தோம்.

"ஜெய் ஹிந்த்" "மகாத்மா காந்திகி ஜெய்" "ஜவாஹர்லால்ஜி ஜிந்தாபாத்:' என்று ஒரு மூவர்ணக் கொடியைப் பிடித்துக் கொண்டு கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்த மூன்று வயதுச் சிறுவன், லீலியைக் கண்டதும் 'அம்மா'வென்று ஓடி வந்து அவள் கால்களைக் கட்டிக்கொண்டான்.

"இந்த பாபுஜி வந்திருக்கிறார் பார்? அவரை வணங்கு" என்றாள் லீலி.

"ஜெய் ஹிந்த்" என்று கைகூப்பினான் பாலகன்.

"ஜெம் ஹிந்த்" என்று நானும் கூறிவிட்டு அவனைத் தூக்கிக் கொண்டு, உள்ளே சென்றேன் கோகலேயோடு லீலி பின் தொடர.

கல்யாணமும் கடிகாரமும்

ஜெயராம்

"நாளது மாதம் 22உ சனிக்கிழமை இரவு திருச்சி ஜங்ஷனை விட்டு 8–20 க்குக் கிளம்பும் இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸில் புறப்பட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6–45க்கு சென்னை எக்மோரையடைந்து, அங்கிருந்து டாக்ஸியில் புறப்பட்டு 7–15 மணி சுமாருக்கு நானும், உன் அம்மாமியும் உன் கிருஹத்திற்கு வந்து சேருகிறோம், கூடுமானால் ஸ்டேஷனுக்கு வரவும். ஞாயிறும், திங்களும் நாங்கள் உன் கிருஹத்தில் தங்கிவிட்டு செவ்வாய்க்கிழமை காலை 7–45 மணிக்கு ஸெண்ட்ரல் ஸ்டேஷனை விட்டுப் புறப்படும் பம்பாய் எக்ஸ்பிரஸில் குண்டக்கல்போகிறோம்."

இது என் மாமா சங்கரய்யரிடமிருந்து எனக்கு வந்த கடிதத்தின் முக்கியமான பகுதி. கண்டிப்புப் பேர்வழி என்றால் எங்கள் சங்கர மாமாவைப்போல் கண்டிப்பான மனிதரைக் காண்பது அரிது. அவரிடம் இந்த "வழவழா கொழகொழா" என்ற வியாபாரமே வைத்துக்கொள்ள முடியாது. அவரைப்போல் 'கறாரா'க நம்மால் நடக்கவும் முடியாது. அயலூரிலிருக்கும் ஒரு பந்துவின் வீட்டிற்கு மாமா போவதானால் "யானைவரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்றபடி முதல் நாள் மேற்கண்டபடி ஒரு கடிதம் வந்து சேரும். அதே பிரகாரம் குறித்த நேரத்தில் அவரும் வந்து சேருவார். இந்த விதமாக அவருடைய திட்டங்களெல்லாம் முன்னதாகவே நமக்குத் தெரிந்துவிடுவதால், அவரை உபசரித்து ஊருக்கு அனுப்புவதும் எளிதாக இருக்கும். இதேபோல அவருடைய வீட்டிற்கு வருபவர்களிடமும் இவ்வகையான கால நிர்ணயங்களையும், முன்னறிக்கைகளையும் அவர் எதிர்பார்ப்பார். காலை 7–30 மணிக்குமேல் அவருடைய வீட்டிற்குப்போனால் காபி கிடைக்காது. "காபி வேளை தவறி வருகிறவன் காபி சாப்பிடாமலா வரப்போகிறான்! அப்படி வந்தாலும் அது முட்டாள்தனமல்லவா!" என்பார் மாமா.

மாமாவின் சாப்பாட்டு நேரம் மணி 10. வீட்டில் ஒரு விருந்தாளியிருந்தால் அவர் "உங்களுக்குச் சாப்பாடு இவ்விடம் தானே, அப்படியானால் ஸ்நானம் செய்துவிட்டு வெளியில் காரியமிருந்தால் முடித்துக்கொண்டு 10 மணிக்குள் வந்துவிடுங்கள். சாப்பாட்டிற்கு வருவது ஸந்தேகமானால் இப்போதே சொல்லிவிடுங்கள்" என்று காலை 8 மணிக்கே எச்சரித்து விடுவார். யாராவது தவறிப்போய் காலை 11 மணிக்குச் சாப்பிடாமல் அவர் வீட்டிற்க்குப் போய் விட்டால், அன்று சாப்பாடு கிடையாது. மாமா சாப்பிட்டாய் விட்டதா? என்று கூடக்கேட்க மாட்டார். ஆனால் 2 மணி வரை இருந்தால் திவ்யமான டிபனும், காபியும் கிடைக்கும். அதைப் பற்றி யாராவது மாமாவிடம் கேட்டால் "பகல் 11 மணிக்கு ஒரு வீட்டிற்கு வருபவன் எப்படிச் சாப்பாட்டை எதிர் பார்த்துக் கொண்டுவரலாம்? அவன் சாப்பாடு நேரம் கழித்து வந்தாலே அவன் சாப்பிட்டாய் விட்டது என்றுதான் அர்த்தம்" என்பார்.

இவ்வளவு கறார் பேர் வழியாக இருக்கும் சங்கர மாமாவைக்கண்டால் அனேகம் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் பிடிக்காது. "எல்லோரும் உங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் செய்யும்பொழுது இந்தக்கண்டிப்பைக் காண்பியுங்கள் பார்க்கலாம்" என்று "சவால்" விடுத்து வந்தார்கள். சங்கரமாமாவிற்கு ஒருபெண்ணும் இருந்தாள். அவளுக்குக் கல்யாணமும் வந்தது. கல்யாணப் பத்திரிகையைப் பார்த்தவுடனே அது மாமாவின் சொந்த வாசகம் என்பது விளங்கிற்று. கல்யாணம் ஒரு நாள் கல்யாணம்தான். பத்திரிகையின் பின்புறம் மாப்பிள்ளையழைக்கும் நேரம், முகூர்த்த நேரம், பகல் சாப்பாட்டு நேரம், மாலையில் 'ரிஸெப்ஷன்' நேரம், இரவு "டின்னர்" நேரம், 'பிறகு ஊர்வலம் புறப்படும் நேரம், ஊர்வலம் முடிந்து வீட்டிற்கு வரும் நேரம் இவைகளெல்லாம் வரிசையாக ரயில்வே கால அட்டவணையைப்போல் அச்சடிக்கப்பட்டிருந்தன!

கல்யாணத்திற்கு முதல்நாள் காலையிலேயே நான் போய்ச் சேர்ந்தேன். ரயில் கொஞ்சம் தாமதமாகப் போனதால் ஹோட்டலில் காப்பி சாப்பிட்டுவிட்டு 8 மணிக்கு மாமாவின் வீடுபோய்ச் சேர்ந்தேன். சங்கர மாமா கால அட்டவணைப்படி கல்யாணத்தை நடத்தி வைக்கும் பொறுப்பை என் தலையில் கட்டினார். எவ்வளவு தூரம் அது நடக்கும் என்பது பற்றி எனக்கு ஸந்தேகம்தான். மறுத்துக்கூற முடியாமல் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

மாப்பிள்ளை வீட்டார் மாலை 5 மணிக்கு ஸ்டேஷனுக்கு வந்து சேரும் ரயிலில் எதிர்பார்க்கப்பட்டார்கள். ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள "முசாபரி" பங்களாவில்

சம்பந்திகளை இறக்கி வைத்து அங்கிருந்து மாலை 6–30 மணிக்கு மாப்பிள்ளை அழைப்பு நடத்துவதாகத் திட்டம். அவர்களுக்குக் காபியும், டிபனும் எடுத்துக் கொண்டுபோய் முசாபரி பங்களாவில் வைத்து சப்ளை செய்யும்படி என் பாட்டியும், இதர பந்துக்களும் கூறினார்கள். மாமா கோபாவேசம் கொண்டார். "மாலை 5–30 மணிக்குக் காப்பி சாப்பிடுவதாவது? இரவு தூக்கமல்லவா கெட்டுவிடும்! காப்பி டயம் பகல் 3 மணிக்கே சரியாய்ப் போய்விட்டதே" என்றார். என் பாட்டியும், இதர பந்துக்களும் இதை ஒப்புக்கொள்ளவில்லை. "அவர் கிடக்கிறாரடா, நீ காரில் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போ" என்று என்னை அனுப்பிவிட்டார்கள். 4–30 மணிக்கே முசாபரி பங்களாவில் ஆகார வகைகளை வைத்துவிட்டு, நான் ஸ்டேஷனுக்குப் போனேன். 5 மணிக்கு வர வேண்டிய ரயில் 4–58க்கே வந்து விட்டது. ஆனால் சம்பந்திப் பேர்களில் ஒரு பகுதிதான் அந்த ரயிலில் வந்தார்கள். பாக்கிப் பேர்கள் ரயிலேறுவதற்குள் ரயில் புறப்பட்டுவிட்டதால், அடுத்த ரயிலில் அவர்கள் வருவதாகத் தகவல் கிடைத்தது. சரியென்று வந்தவர்களை அழைத்து வந்து முசாபரி பங்களாவில் இறங்கச் செய்தேன். இந்த ரயிலில் வராமல் பின் தங்கினவர்களில். சம்பந்தி வீட்டுக் கிழட்டு மாப்பிள்ளைகளில் இரண்டொருவரும் இன்னும் சில முக்கியமான பந்துக்களும் இருப்பதாகவும், அவர்கள் வராமல் டிபன் சாப்பிட முடியாதாகையால் பிரயாணக் களைப்பு ஆறுவதற்கு ஆளுக்கு ஒரு டம்ளர் காபி மாத்திரம் சாப்பிட்டுவிட்டு, மற்றவர்கள் வந்ததும் டிபன் காபி சாப்பிடலாம் என்று வந்தவர்கள் தீர்மானித்துவிட்டார்கள். அதன்படி நடத்திவிட்டு வீட்டிற்கு காரை அனுப்பி இன்னம் 2 தவலைகள் காபி தருவித்தேன். அந்தக் காரிலேயே சங்கர மாமாவும் வந்துவிட்டார். ஆனால் முகத்தில்பிரஸன்னமில்லை.

6–30 மணிக்கு இரண்டாவது கோஷ்டியார் வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் டிபன் சாப்பிடத் தொடங்கியதும், மனிதர்களின் எண்ணிக்கையை விட நான் கொண்டு வந்திருந்த ஆகாரங்கள் மிகக் குறைவு என்ற உண்மை வெளியாயிற்று. மறுபடி காரை அனுப்பி தேவையான பொருள்களை வரவழைத்தேன். இதில் 1 மணி நேரம் தாமதம். இந்த வியவகாரங்களெல்லாம் முடிந்து மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் புறப்படும் பொழுது மணி 9! சங்கர மாமா இரவுச் சாப்பாட்டிற்காகக் குறித்திருந்த நேரமோ மணி 8–30! மாமாவின் கண்களுடன் என் கண்கள் சந்திக்காமல் சமாளித்து வந்தேன்!

மாப்பிள்ளை அழைப்பு முடிந்ததும் "நிச்சயதார்த்தம்" என்பது அடுத்தகட்டம். 7–30 மணி என்று போடப்பட்டிருந்த இந்த சுப கார்யம் இரவு 11மணிக்கு ஒருவழியாகப் பூர்த்தியடைந்தது. வயதான என் மாமா தாத்தா அதாவது என் பாட்டியின் ஸகோதரர் "ஏண்டா சங்கரா! மணி 11 ஆயிற்றே. ராத்திரி 8 மணிக்கு மேல் சாப்பாடு இல்லை என்று சம்பந்திகளைஹோட்டலுக்கு போகச் சொல்லேன்" என்றார் கிண்டலாக. மாமா வாயைத் திறக்கவில்லை. நான் அவசர அவசரமாகச் சாப்பாட்டிற்கு இலை போட ஏற்பாடு செய்தேன். பிறகு சம்பந்திகளைச் சாப்பாட்டிற்கு அழைத்து வர ஆளனுப்பினேன். இதற்கிடையில் மாமா தன் பெண்ணுக்குச் செய்து போட்ட புது நகைகள் சம்பந்திகளின் பார்வைக்கு அனுப்பப்பட்டிருந்தன. அவர்கள் பெண்ணுக்கு 12 பவுனில் செய்து போட்டதாக எங்கள் மாமா சொல்லியிருந்த சங்கிலியை நிறுத்துப் பார்த்ததில் $10\frac{3}{4}$ பவுன் தான் இருந்ததாகவும், பாக்கி $1\frac{1}{4}$ பவுனுக்கு என்ன வழி என்று தீர்மானித்தபிறகு இரவு சாப்பாட்டைப்பற்றி யோசிப்பதாகச் சொல்லியனுப்பிவிட்டார்கள். இந்த தகராறு இரவு 12 மணிக்கு சில பெரியோர்களால் மத்யஸ்தம் செய்து தீர்த்துவைக்கப்பட்டது. இரவு சாப்பாடு முடியும் பொழுது மணி 1–30! மாமாவைச் சாப்பாட்டு இடத்திலேயே காணவில்லை!

காலை 8 மணிக்கு முகூர்த்தம். லக்னம் தவறக்கூடாதாகையால், இது எந்தவிதமாகவோ ஏறக்குறைய குறித்த காலத்திலேயே நடந்து மற்ற வைதிக காரியங்களும் 9–30 மணிக்கு முடிந்தன. காலையில் மேளத்துடன் சம்பந்திகள் ஜாகையில் கொண்டுபோய் வைக்கப்பட்ட இட்லி காபி வகையறாக்கள் 8 மணிக்கே தீர்ந்துபோய்விட்டதாயும், மறுபடியும் ஒரு முறை காலை ஆகாரங்களும், காபியும் அனுப்பவேண்டுமென்றும் சம்பந்திவீட்டிலிருந்து ஆள் வந்தது. "காலை 9 மணிக்கு இட்லியை வளைத்துக்கொண்டு தின்கிறவன் மனுஷ்யனா! இவர்கள் எப்போது சாப்பிட வரப் போகிறார்கள்?" என்று சங்கர மாமா இரைந்து கொண்டிருந்தார்.

பகற்சாப்பாட்டிற்காகக் குறிக்கப்பட்டிருந்த நேரம் 10–30 மணி. 10 மணிக்கெல்லாம் சாப்பாடு தயார். பரிசாரகர்களுக்கு சங்கர மாமாவைக் கண்டால் "சிம்மஸ்வப்



பனம்.'' சமையல் முடிந்து என்ன பிரயோஜனம்? அவர்களைப் போய்ச் சாப்பிடக் கூப்பிட்டதில் 'சம்பந்திப் பிராமணர்' என்று சொல்லப்படுகிற மாப்பிள்ளையின் தகப்பனாருக்கு ஷட்டகர் முகூர்த்தம் முடிந்தவுடன் அதே ஊரில் உள்ள தன்னுடைய பந்து ஒருவரின் வீட்டிற்குப் போயிருப்பதாயும், அவர் வந்துதான் எல்லோரும் சாப்பிட வரமுடியும் என்றும் கூறிவிட்டார்கள்!

மாலை 4–30 மணி முதல் 7 மணி வரை "ரிஸெப்ஷன்" என்று பத்திரிகையில் போட்டிருந்தபோதிலும்கூட காலை 8 மணியிலிருந்து மாமாவின் நண்பர்களில் மிகவும் கண்ணியமான உத்யோகஸ்தர்களும், வக்கீல்களும் கல்யாணம் விசாரிக்க வந்துகொண்டேதான் இருந்தார்கள். இவர்களில் பலர் கல்யாணம் விசாரித்தவுடன் இட்லி, காபியை எதிர்பார்த்தவர்கள்போல் காணப்பட்டார்கள். சிலர் ஒளிவுமறைவில்லாமல் மனதில் எழுந்தவேட்கையை அப்பட்டமாக "காபி சாப்பிட நேரமாகிவிடுமே என்று அவசரப்பட்டு வந்தோம்'' என்றார்கள். மற்றவர்கள் "நாமெல்லோரும் சேர்ந்து சாப்பிட்டால் போகிறது'' என்றார்கள். 7–30 மணிக்கு காபி டிபார்ட்மெண்டு "குளோஸ்'' என்ற என் மாமாவின் கொள்கை காற்றில் பறந்துபோயிற்று. இந்த சம்பவங்களால் என்ன ஏற்பட்டதென்றால் காலை 10 மணிக்கெல்லாம் சமையல் தயாராக இருந்தபோதிலும் கூட இட்லிகாபி இலாகா ஓயாமல் 11 மணி வரை கலகலப்பாக இருந்து வந்தது! காபியின் தரமும் மணி ஆக ஆகக் குறைந்துகொண்டே வந்தது!

மணி 12–30 ஆனதும் சம்பந்திகள் வீட்டில் விசாரணைக்காக எங்களால் நியமிக்கப்பட்டிருந்த வைத்தி சாஸ்திரிகள் வந்து சம்பந்தியின் ஷட்டகர் தான்போன இடத்தில் அவர்கள் கட்டாயப்படுத்தியதால் அவ்விடமே சாப்பிட்டுவிட்டதாயும் மற்ற சம்பந்திகளெல்லோரும் புறப்பட்டு வந்துகொண்டிருப்பதாயும் தெரிவித்தார். பகல் 2 மணிக்கு சாப்பாடு முடிந்தது. ஆனால் வீட்டுப் பேர்வழிகள் சிலருடைய போஜனம் மணி 4 வரை நடந்துகொண்டுதான் இருந்தது. சாப்பாடே 2 மணிக்குத்தான் நடந்ததால் மாமாவின் "2 மணி டிபன்'' என்ற புரொகிராம் அச்சில்மாத்திரம் இருந்தது. அவரும் இதைத் திரஸ்கரித்துவிட்டு "எல்லாம் உன்பாடு, எப்படியோ நடத்து. மொத்தத்தில் சம்பந்தி மனுஷ்யர்கள் சுத்த அஸமஞ்சப் பேர்வழிகள்'' என்று விலகிக்கொண்டு விட்டார்.

இந்த ரீதியில் மாலை 6 மணி வரை டிபன் காபி வகையராக்கள் நடந்துவந்தன. மாலை நலங்கு, ஔபாஸனம் முதலிய காரியங்களை இரவு 8 மணிக்குமுன் முடிக்கக்கூட வில்லை. ஆகையால் இரவு7–30மணிக்கு டின்னர் என்றும், பிறகு 9 மணிக்கு ஊர்வலம் என்றும் போட்டிருந்த திட்டத்தைத் திருத்தி முதலில் ஊர்வலம் பிற்பாடு டின்னர் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் 9 மணியாகியும் கியாஸ் லைட்டுகள், மேளகாரன், ஸாரட்டு முதலிய அம்சங்களை ஒன்று சேர்க்க முடியவில்லை! ஆகையால் டின்னர் ஆன பிறகு ஊர்வலம் என்று மறுபடி மாற்றி உடனே சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. டின்னர் இரவு 11–30 மணிக்கு முடிந்து 12 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு 3 மணிக்குத்திரும்பிவந்து சேர்ந்தது. அத்துடன் தொடர்ச்சியாக சேஷஹோமம் முதலிய கார்யங்கள் நடத்தப்பட்டு, என் அம்மங்காளின் விவாஹ மகோத்ஸவம் கடியாரத்துடன் சிறிதேனும் சம்பந்தப்படாமல் நடந்தேறிற்று. என் மாமா தாத்தா, ஏண்டா சங்கரா! என்னமோ "புரோகிராம்'' அச்சடித்தாயே! அது என்னவாயிற்று!'' என்று மாமாவைக் கேட்டார். "அவனுக்கென்ன தெரியும், குழந்தைதானே! வீட்டைக் கட்டிப்பார், கல்யாணத்தைப் பண்ணிப்பார் என்று தெரியாமலா சொல்லுகிறார்கள்!'' என்றாள் என் பாட்டி தன் சகோதரனிடம்.





கவலைதீர்ந்தது

எல். ஜி.

அன்று நாணப்பா வீட்டில் ஒரே குதூகலம். தினசரி பத்திரிகையை சொந்தத்தில் வரவழைத்து வாசிக்கும் கிராம முனிசிப்பிடம் இரண்டு எலுமிச்சம் பழங்களைக் கொடுத்துத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டதுடன் ‘வில்லேஜ் போஸ்ட்மென்’ கையில் நான்கு காலணாக்களை (தலையும் பூவும் தேய்ந்து போனவை) கொடுத்து ‘சந்தோஷமாகப் போய்வா அப்பா’ என்று உபசாரமும் சொல்லி வைத்தார். நாணப்பா தமது அருந்தவப்புதல்வன், எஸ்.எஸ். எல்.ஸி. பரீட்சையில் தேறிய செய்தி அன்றைய பத்திரிகையில் வெளியாகியிருந்ததே, அத்தகைய மகிழ்ச்சிக்குக் காரணமாகும். தவிர பண்ணையாளுக்கு ஓர் கிழிந்துபோன ஒண்ணரைமுழத் துண்டும், மாடுமேய்க்கும் சிறுவனுக்கு; தைப்பதற்கே இடமில்லாத ஓர் கிழிந்துபோன சட்டையும், சந்தோஷத்தின் சின்னங்களாக இனாம் அளிக்கப்பட்டன. அரையணாவிற்குப் பட்டாணிக் கடலை வாங்கி, அங்கு கூடியிருந்த அரை டஜன் பாலர்களுக்கு வினியோகம் செய்யப்பட்டது. அழுகிய எமிச்சம் பழத்தைச் சார்பிழிந்து, வெல்லத் தண்ணீர் கரைத்து ஷர்பத் எனக்கும் அளிக்கப்பட்டது. எங்கள் ஊர் மிராசுதார் பிள்ளையல்லவா பரீட்சையில் தேறிவிட்டான்? மற்ற பிரமுகர்களும், அவரைக் கண்டு அந்த நல்லசேதியை விசாரித்துவிட்டு, ஒவ்வொருவராகத் திரும்பிச் சென்றனர். பையனது மேல் படிப்புக்காக என்னசெய்வது என்பதைக் குறித்து ஆலோசனை செய்ய அன்றிரவு எட்டுமணிக்கு நாணப்பா வீட்டுத்திண்ணையில் பிரமுகர்களது கூட்டம் நடைபெறுமென அச்சமயம் அறிவிக்கப்பட்டது. எனது சட்டைப்பையிலிருந்து அடிக்கடி மாயமாக மறைந்து போகும் நாணயங்களுக்கும் ரூபாய் நோட்டுகளுக்கும் புகலிடமானவனும் நாணப்பாவின் குமாரனுமான காளப்பாவினிடம் எனக்கு பிரேமை அதிகம். எனவே அன்றிரவு கூட்டத்தில் கலந்துகொண்டு நானும் எனது அற்புதயோசனைகளை அள்ளி வீசினேன்.

பையனை பி.எ. வரைக்கும் படிக்கவைத்து, அதற்குப்பிறகு பி. எல். சட்டப்பரீட்சைக்கும் தயார் செய்துவிட்டால் நம்ம ஊர் விவகாரம் எல்லாம் கோர்ட்டுக்குப் போகாமல் இங்கேயே சல்லிசாகத்தீர்ந்துவிடும். தம்பியை காலேஜிலே சேர்த்துடுங்க. அதுதான் நல்ல யோசனை என்று கோடியாத்து கோபால தீக்ஷதர் தனது கருத்தை வெளியிட்டார்.

அதைப் புன் முறுவலுடன் வரவேற்ற நாணப்பா ஓர் கனைப்பு கனைத்துவிட்டு, “அது சரிதான் தீக்ஷதர்வாள்! வக்கீல் வேலையிலே பொய் சொல்லாத போனா சரிப்படாது. அது தான் யோசிக்கிறேன். எனக்குப் பொய் சொல்றவனைக்கண்டாலே ஒரு வெறுப்பு—உண்மை பேசினால் எனக்கு சந்தோஷம்” என்றுகூறி தீக்ஷதரது யோசனைக்குக் கண்டனத்தை வெளியிட்டார்.

“நம்ம ஊரு விளைச்சலே இல்லாமல் பாழாப்போவுதுங்க. எந்தப்பயிர், எந்தக் காலத்தில் எந்த முறையில் சாகுபடி செய்தால் விளைவு அதிகமாகி, லாபம் கிடைக்கும்” என்ற விவரமே நம் ஊர்வாசிகளுக்குத் தெரியவில்லை. நம்ம குழந்தைமட்டும் விவசாயக் கல்லூரியிலே படிச்சு பாஸ் பண்ணிட்டு, இங்கே வந்துடுச்சுன்னா, அப்புறம் நம்ம ஊர் பொன் விளையும் நாடுதான் என்பதைச் சொல்ல வேணுமா?” என்று ஒரு புதிர் போட்டார் நாட்டாண்மை நச்சுதேவர். அதைக் கேட்ட நாணப்பா ஓர் அவுட்டுச்சிரிப்பு சிரித்துவிட்டு எனக்கும் அது சம்மதம் தானுங்க தேவரே! ஆனால் குழந்தை பாஸ் பண்ணிவிட்டால் சர்க்கார் உத்தியோகத்திலே அமர்ந்து மாசம் ஐநூறு அறுநூறுன்னு சம்பளம் வாங்கிக்கொண்டு, ஊர் ஊராகச் சுற்றவல்லவா ஆரம்பித்துவிடும்! எனக்குக் குழந்தையை விட்டு அவ்வாறு பிரிந்து இருக்க மனமில்லை எனச் சொல்லி தேவரது யோசனையையும் நிராகரித்தார்.

“பொய்யும், திருட்டும் மலிந்துபோய், அயோக்கியர்

களால் பொது மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளுக்கு அளவேயில்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட போக்கிரிகளையெல்லாம் பிடித்து, சிறையில் அடைத்து அவர்களது கொட்டத்தைப் போக்குவதற்கான முறையில் நம்ம பையனை போலீஸ் டிரெயினிங்கிலே சேர்த்துடுங்க—அந்த வேலையில் (எந்த வேலை?) நம்ம காளப்பா சிறந்த தீரன். சீக்கிரத்திலே 'ஸர்க்கிள்' ஆகி, சூபரிண்டெண்டாகவும் வந்துவிடலாம். நம்ம கிராமத்துப்பையன், அவ்வளவு பெரும் உத்தியோகத்தில் அமர்ந்தால், நம் ஜில்லாவிற்கே பெருமையல்லவா?'' என்று எனது அந்தரங்கக் கருத்தை வெளியிட்டேன்.



"ஆ! போலீஸா?'' என்று அலறி எழுந்த நாணப்பா "அது வேண்டாம் அப்பா! எப்பொழுது பார்த்தாலும் திருடர்களுடனும், கொலையாளிகளுடனும் பழகவேண்டும். நான் ராமேசுவர யாத்திரை செய்து ஆயிரக்கணக்கில் செலவழித்து சாந்திகள், ஹோமங்கள் செய்து அருமையாகப் பிறந்த குழந்தை திருடன் கையாலே அடிபட்டு இறந்து போனால், என் மனம் என்ன பாடுபடும் தெரியுமா? அதெல்லாம் போலீஸ் வேலை அவனுக்கு உதவாது என்று கூறி நிர்த்தாக்ஷண்யமாக எனது யோசனையை உதறித் தள்ளிவிட்டார்.

அன்றிரவு அதற்கு மேல் சபை கலைந்தது. மறு நாள் பகல் மூன்று மணிக்குக்கூடி ஓர் முடிவுக்குவரலாம் என்ற தீர்மானத்துடன் எல்லோரும் படுக்கைக்குச் சென்றனர். ஆயினும் குழந்தை காளப்பாவை எந்த முறையில் மேல் படிப்புக்கு அனுப்புவது என்ற கவலைமட்டும் என் உள்பட எல்லோரது மனதையும் பற்றிக்கொண்டது.

* * *

மறுநாள் குறித்த நேரத்தில் எல்லோரும், கிராமச் சாவடியில் கூடினோம். "இன்றைக்கு ஏதாவது ஒரு தீர்மானமான முடிவு செய்தபிறகுதான் வீட்டிற்குச் செல்லவேண்டும்'' என்ற பீடிகையுடன் வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார் நாணப்பா. அதற்குள் 'வில்லேஜ் போஸ்ட்மென்' அங்கு தோன்றி, தினசரிப் பத்திரிகையை, கிராம முன்சிபிடம் கொடுத்தான். அதை வாங்கி பரபரப்புடன் பிரித்துப் பார்த்தேன். அதில் "நேற்று வெளியான நம்பர்களில் சில தேர்ச்சி பெற்றதாக, தவறுதலாய் அச்சடிக்கப்பட்டுள்ளன. அவை கீழக்கண்டவை 03076 01564 10508 00809. இந்த எண்ணிக்கைபெற்றவர்கள் பரீக்ஷையில் தேறவில்லை'' என்று வெளியாயிருந்தது.

"காளப்பா! உன் நம்பர் என்ன அப்பா?'' என்றேன்.

"ஏன் ஸார்! 10508 என்று உடம்பை அஷ்டகோணலாக நெளித்துக்கொண்டு பதில் கூறினன்.

"சரி நமது யோசனைக்கே இடமில்லை என்று பேப்பரைத் கீழே எறிந்தேன். சிக்கலான பிரச்னை சுபமாகத் தீர்ந்ததில் எல்லோரது கவலையும் தீர்ந்தது!

கட்டுரையாளருக்கு

'சுதேசமித்திரன்'' வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

—ஆசிரியர்.

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்மா

இதுவரையில் ...

[எட்டாம் நூற்றாண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கிரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக் கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனாபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனோ கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறான். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிறார். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிறார்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொறாமையுண்டாக்குகிறது.]

14
பன்றிநாட்டில் அஹிம்ஸா தர்மம்!

இடுப்பிலே காவியாடையும் நெஞ்சிலே சந்தனமுமாக வந்து மந்திரி மாறங்காரியைச் சந்தித்த அந்தப் பேர்வழியின் பெயர் நரஸிம்மன் தான் என்று செல்வநம்பியும் தெரிந்துகொண்டார். முதலில் அந்த விகடவேஷம் செல்வநம்பிக்குக் கோரமாகவும், அருவருப்பாகவும் தோன்றியது. உள்ளப் புனிதத்திற்கு அறிகுறியான நெற்றித் திலகத்தையோ, திருமண் காப்பையோ, ஒரு வேஷதாரியோ, கள்வனோ அல்லது வெறும் ஆசாரக்கள்ளனோ அணிந்து கொண்டு வந்தால் எப்படியிருக்குமோ, அப்படியிருந்தது செல்வநம்பிக்கும் நரஸிம்மனின் சிங்கார—வைராக்கிய விபரீத வேஷம். ஆனால் 'பிரசித்திபெற்ற உளவாளியான நரஸிம்மன் தான்; தங்கமான பாகவத ஹிருதயம், மாறங்காரியின் சிஷ்ய சம்பத்து!' என்று தெரிந்துகொண்டதும் 'இப்படிப் புனித வேடத்தையும் போட்டுக் கொள்வது உளவர்களின் தருமம் தானே!' என்று எண்ணலானார் செல்வநம்பி.

ஒற்றர்கள் புனிதமான சமய வேடங்களையும் போட்டுக்கொள்வது தொன்றுதொட்டு வழங்கி வரும் வழக்கம் தான். சமயச் சின்னங்களைப் பரிகசிப்பது அவர்கள் நோக்கமன்று. அந்த வேடங்களையும் கூசாமல் தரித்துக்கொண்டு திருட்டும். புரட்டும் நடத்துகிற பேர்வழிகளைக் கண்டுபிடிக்கவே நல்ல மனிதர்களான ஒற்றர்களும் அந்த வேடங்களை அணிந்துகொள்வதுண்டு. 'ஒற்றர்களின் தலைவனும் உத்தமனுமாகிய நரஸிம்மனும் சமயவேடம் பூண்டு பாண்டி மகாராஜ்யத்திற்கு விரோதமாக நடைபெறும் சதியாலோசனைகளையும், பக்தர்களின் பாகவத மகாராஜ்யத்திற்கு விரோதமாக நடைபெறும் பொய்ப் பிரசாரங்களையும் கண்டுபிடித்து வருகிறான்; நல்லது தானே' என்று தம் உள்ளத்தைச் சமாதானம் செய்துகொண்டார் செல்வநம்பி.

நால்வரும் சிறிது தூரம் நடந்தார்கள். வில்லி மாறங்காரியின் முகத்தைப் பார்த்தார். பார்த்த

தும், திடீரென்று 'சுவாமி நடக்கவேண்டியிருக்கிறது' என்றார் மந்திரி. பளிச்சென்று அருகேயிருந்த மரக்கூட்டத்தின் நிழலிலிருந்து ஒரு பல்லக்கு வந்தது. செல்வநம்பி ஆச்சரியத்துடன் அந்த மரக்கூட்டத்தையும் பார்த்து, மந்திரியாரின் முகத்தையும் பார்த்தார். மங்கிய நிலவில் அந்த முகம் பொங்கிய ஒளியுடன் யாரோ ஒரு மந்திரவாதியின் முகம்போலத் தோன்றியது. வில்லியும், நரசிம்மனும் மந்திரவாதியின் சீடர்கள்போலத் தோன்றினர். என்ன? இவர்கள் மந்திரம் போட்டு ஒரு மாயப் பல்லக்கை வரவழைத்து விட்டார்களா?

'சுவாமி நடக்கவேண்டியிருக்கிறதே' என்று சொன்னாரே, அப்போது 'இருக்கிறதே' என்பதை அழுத்தி உரக்கச் சொன்னார். அதை அடையாள வார்த்தையாகக் கேட்டுத்தான், அங்கே இம்மந்திரி ஏற்கெனவே விட்டு வைத்திருந்த பல்லக்குப் போகிகள் இப்படித் திடீரென்று தோன்றினார்கள்.

செல்வநம்பி பல்லக்கில் ஏறிப்புறப்பட்டதும்,

தேங்காய்த் தண்ணீர் அலேமோத
மாங்காய் காய்த்து உருளும் அந்த
மகராசன் சீமையிலே!

என்று நரஸிம்மன் பாடியது காதில் விழுந்தது. அது ஒரு நாடோடிப் பாட்டின் பகுதி என்பது செல்வநம்பிக்கும் தெரியும். அவரும் அந்தப் பாட்டைக் கேட்டிருக்கிறார். பன்றி நாட்டில் வழங்குகிற பாட்டல்லவா? பன்றி நாட்டிலும் வெள்ளாற்றங்கரையிலுள்ள கோனாடு காடுகளில் வழங்குகிற பாட்டு. அதை ஏன் பொருத்தமில்லாமல் பளிச்சென்று நாம் பல்லக்கு ஏறியதும் நரஸிம்மன் பாடத் தொடங்கி விட்டான்?' என்று எண்ணினார்.

பிறகு அந்தப் பொருத்தமும் செல்வநம்பிக்குப் புலனாகிவிட்டது. பன்றி நாட்டின் அந்தப் பகுதியில் உள்ள காட்டுப்புறங்களில்தான் பௌத்த சமயத் துறவிகள் கூட்டமாகத் திரிகிறார்கள் என்பது நினைவிற்கு வந்தது. அங்கேதான் ஆனந்ததீர்த்தரின் தபோவனம் இருப்பதாகவும் கேள்விப்பட்டிருந்தார். அந்தப் பிரதேசத்திற்குப்போய் நரஸிம்மன் ஏதேதோ சில முக்கியமான இரகசியங்களை அறிந்து வந்திருக்கவேண்டும் என்று ஊகஞ் செய்துகொண்டே போனார். ஆம்; அவருடைய பல்லக்கு மரவரிசைகளுக்கிடையே போய் மறைந்துவிட்டது; அவருக்கென்று அரசன் அமைத்திருந்த மாளிகையை நோக்கிப் போய் விட்டது.

பல்லக்கு மறையும் வரையில் நரஸிம்மனையும், வில்லியையும் நோக்காமல் பல்லக்கையே மாறங்காரி நோக்கிக்கொண்டிருந்தபோதிலும் பாட்டைக் காதில் நன்றாக வாங்கிக்கொண்டார்.

மாங்காய் காய்த்து
உருளும் அந்த............

என்ற பகுதியைக் கேட்டதும் வில்லி 'எத்தனை மாங்காய் பத்தா, பதினைந்தா' என்று கேட்டான். நூற்றுக்கணக்காகவும் இருக்கலாம் என்று சொல்லிக்கொண்டே மந்திரி நரஸிம்மனை நோக்கினார்.

ஆயிரக்கணக்கு; சிலசமயம் பதினாயிரக் கணக்கு! என்று நரசிம்மன சொன்னதும், மாறங்காரியும் திகைத்துப் போனார்.

'அத்தனை சன்னியாசிகளா? ஒரு படையெடுப்பைப் போல் இருக்கிறதே! என்று கேட்டான் வில்லி.

'ஆம். படையெடுப்பேதான்; என்னைப்போல் அவர்கள் போலிச் சன்னியாசிகள்!' என்றான் நரசிம்மன், நகைத்துக்கொண்டே.

'அத்தனை பேர்களும் அங்கே என்ன செய்கிறார்கள்?' என்று கவலையுடன் வில்லி கேட்டான்.

'அந்தப்பகுதியே யுத்தத்தோற்றம் அடைந்திருக்கிறது; அது சதியாலோசனைக் கும்பல் மட்டுமல்ல என்று பதில் சொன்னான் நரஸிம்மன்.

பிறகு நரஸிம்மன் விவரமாக, தான் கண்டறிந்த விஷயங்களைச் சொல்லத் தொடங்கினான்:

நமது மகாராஜாவுக்குஅடங்கியிருக்கும்சோழ ராஜ்யத்திற்கும், நமது பாண்டிய நாட்டுக்கும் மத்தியிலுள்ள அந்த எல்லைப்பிரதேசம்தான் உங்களுக்குத் தெரியுமே; காடுகளும் காட்டாறுகளுமாயிருக்கும் அந்தப் பிரதேசத்தை ஒரு சுபிட்சபூமியாகச் செய்துகொண்டு தனிக்காட்டரசர்கள்போல் வாழ்ந்துவருகிறார்கள்.பௌத்த சன்னியாசிகள் என்று சொல்லிக் கொள்ளும் அவர்கள் ஒரு காலத்தில் உண்மையான பௌத்தத் துறவிகள் அங்கே வசித்தார்கள். அப்போதெல்லாம் நூற்றுக்கணக்காகத்தான் இருந்தார்கள். அந்த உண்மைத் துறவிகள் இப்போது எங்கே போய் விட்டார்களோ? இன்று அங்கே காணப்படும் சன்னியாசிக் கூட்டம் ராஜத்துரோகக் கும்பல்தான் பாண்டிமகாராஜ்யத்தையும் உடைத்து பக்தி மதங்களையும் ஒழித்து நாஸ்திகத்தைப் பரப்பிவிட்டால் பெயரளவில் பௌத்தசமயம் என்று சொல்லிக்கொண்டு பொது ஜனங்களைத் தங்களுக்கு இஷ்டமானபடி உபயோகித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறது அந்தச் சுயநலக் கும்பல்.'

இப்படி நரஸிம்மன் சொல்லிக்கொண்டு வரும்போதே வில்லி கவலையுடன் இடைமறித்து

கொடும்பை என்ற கொடும்பாளூரில் மூவாயிரம் பேர் அடங்கிய நமது படை இருக்கிறதே, அந்தப் படைவீரர்களின் தலைவன் நீங்கள் சொல்லுகிறபடி செய்தி அனுப்பவில்லையே,—என்ன அதிசயம்!' என்று கேட்டான்.

அதற்கு நரஸிம்மன், 'அதிசயம் என்ன இருக்கிறது? செத்தவர்கள் செய்தி சொல்லுகிறார்களா?' என்று பதில் சொன்னான்.

'அப்படியா செய்தி? அவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டார்களா?' என்று கேட்டான் வில்லி பெருங்கவலையுடன்.

'ஆம், அந்தச் சிறு படையைச் சன்யாசிக் கூட்டம் தோற்கடித்துச் சிதற அடித்து விட்டது. அந்தப் படைத்தலைவரையும் கொன்று விட்டது' என்றான் நரஸிம்மன்.

அதுகேட்ட வில்லிக்கும், மாறங்காரிக்கும் கோபம் பொங்கி விட்டது. அதே சமயம் மனக்குழப்பமும் ஏற்பட்டது. மதுரையிலிருந்து சோழநாட்டின் அக்காலத் தலைநகரான உறையூருக்குப் போகும் ராஜபாதையாகிய பெருவழியில் கொடும்பை என்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்த படை அழிந்துவிட்டதென்றால், திடீரென்றுசோழனும் பாண்டிமகாராஜ்யத்திற்கு விரோதமாய்க் கலகம் செய்யக் கூடுமல்லவா? மேலும் கலகக்காரர்கள் சன்னியாசி வேடத்தில் இந்த அக்கிரமத்தைச் செய்து விட்டார்கள்! மூவாயிரம் படைவீரர் அடங்கிய பட்டாளத்தையும் ஜயிக்கக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாக இருக்கிறார்கள். பெரும்படைகொண்டு அவர்களோடு போர் புரிவதென்றால்,'ஐயோ, துறவிகளை வதைக்கிறார்களே! மதப்போர் புரிகிறார்களே!' என்றெல்லாம் அபவாதம் உண்டாகும். இத்தகைய எண்ணங்களே மந்திரிக்கும், தளபதிக்கும் கோபத்தோடு மனக்கலக்கத்தையும் உண்டாக்கி விட்டன.

'அவர்களுக்கு விரோதமாகப் படைகளை உடனே அனுப்பவேண்டும். நானே படை கொண்டு போகலாமென்று எண்ணுகிறேன்' என்றான் வில்லி மந்திரியை நோக்கி.

அதற்கு மந்திரி, 'விரைவில் ஆலோசனை செய்து, மகாராஜாவையும் கலந்துகொண்டு வேண்டியது செய்துகொள்ளலாம். அபாயகாலத்தில் தானே மன அமைதி மிகவும் அவசியமானது. இச்சமயத்தில் விஷ்ணுசித்தரும் விஜயம் செய்கிறார்; வித்வத் சபையும் கூடவேண்டியிருக்கிறது. அதில் பௌத்த வித்வான்களும் துறவிகளும் கலந்துகொள்ள வேண்டும் என்பது அரசரின் அபிப்பிராயம். ஆகவே, நாம் திடீரென்று கலவரப்படுத்தவும் கூடாது. நாளை ஆலோசித்து ஒரு முடிவிற்கு வருவோம்' என்று பதில் சொன்னார்.

அப்போது நரசிம்மன் அந்தச் சன்னியாசிகள் அங்கேயே சிருஷ்டிக்கலாம். தொடங்கித் தவம் புரிந்துகொண்டிருப்பதாகவும், தவமகிமையினாலேயே அவர்களுடைய தொகை அதிகரிப்பதாகவும், அவர்கள் நின்றாலும் உட்கார்ந்தாலும் உறங்கினாலும் வீண்பொழுது போக்கினாலும்

சண்டை பிடித்தாலும், தவத்திலேயே இருப்பதாகவும், பன்றி நாட்டிலுள்ள பாமர மக்கள் நம்பி வருகிறார்கள்' என்றான்.

அதற்கு மாறங்காரி, 'ஆம்' அவர்கள் நீண்ட காலமாகவே இங்கு வசித்து வருவது உண்மைதான். ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே வட நாட்டிலிருந்து பௌத்தமத போதகர்களின் கூட்டம் ஒன்று நம் தமிழ்நாட்டுக்குப் பௌத்த மன்னனை அசோகனால் அனுப்பப்பட்டது. அவர்களில் சிலர் பன்றிநாட்டில் வெள்ளாற்றங் கரைக்கு வடக்கும், தெற்குமாக உள்ள காட்டுப் பகுதிகளில் தங்கிவிட்டார்கள். சித்தன்னவாசலில் குன்றிலும் குகைகள் வெட்டிக் கொண்டு தங்கி வந்தார்கள்' என்றார்.

'ஆனால் சன்னியாசிகளின் தொகை பெருகி வருவது எப்படி?' என்று கேட்டான் வில்லி.

அதற்கு நரஸிம்மன் பதில் சொன்னான்: 'இந்தச் சந்நியாசிகள் ஒரே இடத்தில் இருப்பதில்லை. சதாகாலமும் சஞ்சாரத்திலேயே இருக்கிறார்கள்; ஆள் சேர்க்கிறார்கள். உடல்—கட்டு வாய்ந்த குழந்தைகளைக் கண்டால் ஒருவருக்கும் தெரியாமல் திருடிக்கொண்டு போய் வளர்த்துச் சன்னியாசிகளாக்கிக் கொள்கிறார்கள். சேர நாட்டுப் பக்கத்திலிருந்து சில ஆண்டுகளாக இச்சன்னியாசிகள் கூட்டங் கூட்டமாய் வந்த வண்ணமாயிருக்கிறார்கள்.

'நமக்கேன் இந்தச் சன்னியாசிகளைப்பற்றிய செய்தி விசேஷமாய் எட்டுகிறதில்லை?' என்று கேட்டார் மந்திரி.

'அவர்கள் சன்னியாசிகளாகவும், யாத்திரிகர்களாகவும் காணப்படுவதால், ஜனங்களுக்கு அவர்களிடம் பக்தி, விசுவாசம் அதிகமாயிருக்கிறது. பன்றிநாட்டு ஜனங்களுக்கு மூடபக்தியும் அதிகமாயிருப்பதால், அந்த "அஹிம்ஸா தர்மவாதிகள்" ஆகாசத்திலிருந்து குதித்து வருவதுபோல் எங்கிருந்தோ, எப்படியோ வந்துவிடக்கூடும் என்று நம்புகிறார்கள். பெரும்பாலும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் இந்தச் சன்னியாசிகளை ஜனங்கள் சஞ்சார யோகிகள் என்று சொல்லுகிறார்கள், கும்பிடுகிறார்கள். ஆகவே, இச்சன்னியாசிகளை கொள்ளையடித்துப் பொருள் சேர்த்துக் கொலைக் கருவிகள் செய்துகொண்டிருந்தாலும், கலக முயற்சிகளிலும் போர் முயற்சிகளிலும் தலையிட்டுக் கொண்டாலும், அஹிம்ஸா தர்மவாதிகளாகவே கருதப்படுகிறார்கள். இவர்கள் தெய்வபக்திக்கு விரோதமாய்ப்பிரசாரம் செய்த போதிலும் ஜனங்களுக்கு இவர்களிடம் தெய்வ பக்தி ஏற்பட்டிருக்கிறது. இவர்களுடைய சாபத்திற்கு அஞ்சுகிறார்கள், அனுக்கிரகத்திற்கு ஆசைப்படுகிறார்கள்' என்றான் நரஸிம்மன்.

இப்படி அவர்கள் பேசிக் கொண்டே மெள்ள நடந்து வந்தார்கள். வைகையாற்றங்கரையில் ஒரு மாந்தோப்பிற்கு வந்ததும், 'இனி நாம் மூவரும் இங்கேயே இவ்விஷயத்தைத்தொடர்ந்து பேசிவிட்டுப் போவோம். உங்களுக்கு ஆட்சேபமில்லையே?' என்று வில்லியைக் கேட்டார் மாறங்காரி. அதற்கு அவன், தங்களுக்குச் சிரமம் இல்லாவிட்டால் அந்தச் சன்னியாசிகளைக் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதையெல்லாம் தெரிந்துகொண்டுதான் வீட்டுக்குப் போகவேண்டும் என்பதே என்னுடைய தீர்மானம். இல்லாவிட்டால் எனக்குத் தூக்கம் வராது என்று பதில் சொன்னான்.

அந்த மாந்தோப்பில் ஒரு பகுதி இருண்டிருந்தது. இனிமேல் உறங்கத்தான் நேரம் ஏது? பொழுது விடிய அதிக நாழிகை இல்லையே, இங்கிருந்தே பேசுவோம்' என்றார் மாறங்காரி.

'இந்த இருட்டில் நாம் இருப்பதே ஒருவருக்கும் தெரியாது. இருட்டுக்குக் கண்ணில்லை' என்று சொல்லிக்கொண்டே வில்லியும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

'ஆனால், இருட்டுக்குக் காதுண்டு என்று சொல்லியவண்ணம் நரஸிம்மனும் வந்து சேர்ந்தான். அங்கு வீசிய குளிர்ந்த இளங்காற்றால் இலைகள் சல சலவென்று ஒலித்தன. 'இருட்டுக்குக் காதுண்டு; ஆனால் சலசலப்புக்கு அஞ்ச வேண்டாம்' என்றான் தளபதி வில்லி.

'தங்களுக்கு வேண்டிய விஷயங்களை நரசிம்மனைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்' என்றார் மாறங்காரி வில்லியை நோக்கி.

'அப்படியே' என்று சொல்லிவிட்டு, வில்லி நரஸிம்மனை நோக்கி, 'இந்தச் சன்னியாசிகள் திருடர்களாகவும் இருந்தால், ஏழை ஜனங்கள் அவர்களிடம் விசேஷ பக்தி விசுவாசத்துடன் இருப்பதாகக் கேள்விப்படுகிறேனே, அது எப்படி?' என்று கேட்டான்.

'அவர்கள் ஏழை மக்களிடம் திருடுவதேயில்லை. செல்வர்களிடம்தான் திருடுகிறார்கள். தங்களுடைய இருப்பிடத்திற்குத் தெற்குப் பகுதியிலும், அதை அடுத்திருக்கும் பகுதியிலுமே பெரும்பாலும் இவர்களுடைய "திருட்டுத் திருவிளையாடல்கள்' நடைபெறுகின்றன. அந்தப் பகுதிகளில் பெருஞ் செல்வர்களான வணிகர்கள் வசிக்கிறார்களல்லவா? அச்செல்வர்களிடமிருந்து அபகரிக்கப்படும் திரவியத்தைக் கொண்டு ஏழைகளுக்குத் தருமமும் விமரிசையாகச் செய்கிறார்கள்!' என்றான் நரஸிம்மன்.

'சரி; அந்த வணிகர்கள் ஏன் அரசர் பிரானுக்கு விஷயத்தைத் தெரிவிப்பதில்லை?' என்று கேட்டான் வில்லி.

'அந்த வணிகர்கள் பெரும்பாலும் திரைகடல் ஓடித் திரவியம் தேடும் வியாபாரிகள்; சாதுக்கள், "பொருள் போனால் போகிறது, உயிர் இருந்தால் எவ்வளவோ சம்பாதித்துக்கொள்ளலாம்" என்ற கொள்கையுடையவர்கள். சன்னியாசிகளே திருடுகிறார்கள் என்றால், அதுவும் நமக்கு நல்லகாலம் தான் என்று எண்ணி, அப்படியும் புண்ணியம் சம்பாதித்துக் கொள்வதாக நினைக்கிறார்கள்! மேலும் அரசாங்கத்தாரிடம் முறையிட்டுக்கொண்டு பஞ்சாயத்து ஸ்தலங்களுக்குத் திரிந்து கொண்டிருந்தால் வியாபாரம் கெட்டுப்போகும் என்று அஞ்சுகிறார்கள்' என்றான் நரஸிம்மன்.

'சரி, இன்னும் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அவர்கள் எல்லாரும் மோசமானவர்கள் தானா?' என்று கேட்டான் வில்லி.

'அப்படி இல்லவே இல்லை. அவர்களில் பலர் ஒழுக்கமுள்ளவர்கள்; எல்லாரும் பௌத்த மதப்பற்று உள்ளவர்கள்; ஆனால் அஹிம்ஸா தர்மம் என்பது வேஷம்தான்; புத்தபக்தி இவர்களுக்கு உண்மையாகவே உண்டு, சாமர்த்தியம் உள்ளவர்களை வெகு சுலபமாய்க் கண்டறிந்து அவர்களுக்கு எப்படியெல்லாமோ உதவி செய்து நெருங்கிப் பழகி அவர்களையும் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள்; இல்லாவிட்டால் ஆபத்துக் காலத்தில் தங்களை ஆதரிக்க வேண்டுமென்று வாக்குறுதி பெற்றுக் கொள்கிறார்கள். இந்தச் சன்னியாசிக் கூட்டத்தாரின் நல்ல குணங்களும் இவர்களுடைய செல்வாக்கிற்குக் காரணம் என்றான் நரஸிம்மன்.

இன்னும் ஒரு கேள்வி: அவர்கள் கொள்ளையடித்துக் கொண்டு வரும் பொருள்—வகைகளையும் தயாரித்துவரும் ஆயுதங்களையும் எங்கே சேமித்து வைக்கிறார்கள்? அது குறித்து ஏதாவது தெரியுமா? என்று கேட்டான் வில்லி.

அதற்கு நரஸிம்மன், 'மூன்று இடங்களில் சேமித்து வைத்திருக்கிறார்களாம். கண்டதில்லை, கேட்டதுதான். ஒன்று அவர்கள் இருக்கும் காட்டுப்பக்கம். ஆனால் அங்கே அதிகம் பொருளையாவது ஆயுதங்களையாவது வைத்துக் கொள்வதில்லை. பன்றி மலையென்று சொல்லப்படும் பழனிமலையில்தான் ஏராளமான ஆயுதங்களும், ஓரளவு செல்வப்பொருளும் மறைவாக வைக்கப்பட்டிருக்கின்றனவாம். மூன்றாவதாக, சேர அரசனிடம், இவர்கள் கொடுத்துவைத்திருக்கும் பொருள்களும், இவர்களுக்காக அவன் கொடுக்கும் பொருள்களும் எவ்வளவோ அதிகமாக இருக்கின்றனவாம்' என்று பதில் சொன்னான்.

'சரி, சரி; சேர அரசனுக்காகவே இந்தச் சதிகாரக் கும்பல் இப்படிப் பெருகி வருகிறது. போகட்டும். இனி ஒரே ஒரு கேள்விதான். இதுதான் கடைசிக் கேள்வி. பன்றிநாட்டிலுள்ள இந்த "அஹிம்சா தர்ம" கும்பலுக்கு அந்த அஹிம்ஸா தர்மமூர்த்திதானே தலைவர்? என்று கேட்டான் வில்லி.

அப்போது சந்திரன் மேகத்தில் மறைந்து, அந்த இருண்ட தோப்பு மேலும் அதிகமாய் இருண்டிருந்தது. நரஸிம்மன் உடனே பதில் சொல்லவில்லை. எழுந்திருந்து மாமரப் பக்கங்களைச் சோதித்துப் பார்த்தான்.

கடைசியாக நரஸிம்மனை ஒரு திசையைச் சுட்டிக்காட்டி, 'அதோ மெள்ள மெள்ளப் போய் மறைந்து விட்டாரே, அந்த அஹிம்ஸா தர்மமூர்த்திதான் பன்றிமலைக்காட்டில் "அஹிம்ஸா தர்ம"க் கொலைகளும், கலகங்களும் நடத்திவரும் பெருங்கூட்டத்தின் மாபெருந் தலைவர்!' என்றான்.

நரஸிம்மன் சுட்டிக்காட்டிய திசையில் கண்களை ஊன்றிப் பார்த்த வில்லிக்கும், மாரங்காரிக்கும் மறைந்து கொண்டிருந்த இந்த உருவம் புலனாயிற்று! ஆனந்த தீர்த்தர்தான் என்று தெரிந்துகொண்டார்கள்.

(தொடரும்)

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,

'சுதேசமித்திரன்' ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.



காஷ்மீரப் பிரச்னையைப்பற்றிய விசாரணையை இந்தியாவில் துவக்குவதற்காக வந்துள்ள கமிஷன் சென்ற 10-ந்தேதி டில்லி வந்தது. கமிஷன் தலைவர் டாக்டர் ரிகார்டோ ஜே ஸிரியை, விமானகூடத்தில் வரவேற்று ஸ்ரீ கே. பி. எஸ். மேனன் கைகுலுக்குகையில் எடுத்த படம்.



காஷ்மீர் விசாரணைக் கமிஷன் பிரதிநிதிகள் டில்லி விமான கூடத்திலிருந்து அவரவர்கள் விடுதிக்குப் புறப்படுகையில் எடுத்த படம்.



காஷ்மீர் போரில் வீர சுவர்க்கம் புகுந்த பிரிகேடியர் ஊஸ்மானுக்கு டில்லி ஸெகரடேரியட்டுக்கு முன்பாக நடந்த பிரமிக்கத்தக்க மரியாதை. நடுவே உள்ள ஜீப்பில் நேரு வீற்றிருக்கிறார்.



ஊஸ்மான் ஈமக்கிரியையின்போது கவலை தோய்ந்த முகங்களுடன் ஸ்ரீ ராஜன் பாபு, அபுல்கலாம் ஆஸாத், ராஜாஜி, இந்திரா காந்தி, பண்டித நேரு முதலியோர் நிற்கின்றனர். உயர்தர ராணுவ அதிகாரிகள் அனைவரும் அப்போது பிரசன்னமாயிருந்தனர்.

இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

சோராத காதல் பெருஞ்சுழிப்
பால், தொல்லை மாலையென்றும்
பாரா தவனைப்பல் லாண்டென்று
காப்பிடும் பான்மையன்தாள்
பேராத உள்ளத்(து) இராமா-
னுசன்தன் பிறங்கியசீர்
சாரா மனிசரைச் சேரேன்,
எனக்கென்ன தாழ்வினியே? 15.

தாழ்வொன்றில் லாமறை தாழ்ந்து,
தலமுழு துங்கலியே
ஆள்கின்ற நாள்வந்(து) அளித்தவன்
காண்மின், அரங்கர்மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக்
கொடுத்தவள் தொல்அருளால்
வாழ்கின்ற வள்ளல் இராமா-
நுசன்என்னும் மாமுனியே 16.

[சோராத-சோர்வே இல்லாத. காதல்-பக்திக் காதலின். தொல்லைமால்-நித்தியனாகிய ரட்சகமூர்த்தியாகிய திருமால். காப்பிடும்-மங்கள வாழ்த்துச் செய்யும். பான்மையன்-சுபாவமுள்ள பெரியாழ்வார். பேராத-நீங்காத. பிறங்கிய-விளங்கிய. சீர்சாரா-சிறந்த குணங்களைப்பற்றியிராத. சேரேன்-சேரமாட்டேன்.]

ஓய்வு ஒழிவில்லாமல் பெருகிக்கொண்டிருந்த பக்திக்காதல் என்ற வெள்ளத்தின் பெருஞ்சுழியிலே அகப்பட்டுக்கொண்ட பெரியாழ்வார், 'திருமால் நித்தியராகவும் சர்வ ரட்சகராகவும் இருக்க, அவருக்கும் வாழ்த்து அவசியமா?' என்று பாராமல் பல்லாண்டுபாடி வாயார வாழ்த்தினராம். அந்தப்பெரியாழ்வாருடைய அடிமலர்களைவிட்டு நீங்காத பக்தியுள்ளம் கொண்ட ராமானுஜரின் சிறந்த குணங்களைப்பற்றி வாழாத மனிதரை நான் சேரமாட்டேன். எனக்கும் உண்டோ குறை?

மறை-வேதம். தலமுழுதும்-பூமியெங்கும். அளித்தவன்-(உலகத்தைக்) காப்பாற்றியவன். அரங்கர் மௌலி-ஸ்ரீ ரங்கநாதனின் கிரீடம். சூடிக்கொடுத்தவள்-சூடிக்கொடுத்த ஆண்டாள். தொல் அருளால்-பழமையான அருளால்.

ஒரு தாழ்வும் இல்லாத வேதமும் தாழ்வடைந்து, கலியுகம் தனிக்கோல் செலுத்திய காலத்திலே தோன்றித் தாழ்வுற்ற வேதத்தை உயர்வு செய்து, அதனால் உலகத்தைக் காப்பாற்றியவர் ராமாநுஜர். இந்த வள்ளலின் வாழ்வு, ஸ்ரீ ரங்கநாதனுக்கு முடிமாலையைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் அருளால் வந்தது.

ராகம் : சாவேரி தாளம் : சாபு

ஆ : ஸரிமபதஸ் — அ : ஸ்நிதபமகரிஸ. 15-வது கர்த்தாவில் (மாயா மாளவகௌள) ஜன்யம்.

(பாட்டு 15—ம் 16—ம்)

; ; ஸா ரீ கா ரீ ரீ	ஸா; ஸா; ஸா ரிக ரிஸ	ꞈி.த ஸா ரீ ரீ ப ம தப தா	பா, த ப ம கா, ரி ரீ ; ‖
சே ரா . . த	கா தல் பெரும். . .	. . சு ழிப் பால். . தொல்லே	மா லே . . யொன் . றும் ‖
; ஸரி ரி பா ம தா பா பா	பா நித பம தா பா தா ;	மப தரி ஸ்நி தப தா;	பா, தபம பா ; பா ; ‖
பா . ரா. . த வ னைப்	பல் . லாண் . . டென் . று	கா. . . . ப் பி. டும் . பான்	மை. . . . யன் தாள் ‖
; பநி தப தம பா: தா	ஸ்ா, ஸ்ா, ரீ ஸ்ா ரீ ரீ	ஸ்ா: ஸ்ா ரிக்ாரி ரீ ஸ்ா	ஸ்ாக் ரிஸ் ஸ்ா ஸநி பா தா; ‖
பே. ரா. . . த . உள்	ள த் தி ரா . மா .	. னு சன் . . றன்பி	றங் . கி . . ய . . சீர் ‖
; ; பத ஸ்ா ரிக் ரீ ஸ்ா	ஸ்ரிக் ரிஸ் ஸ்ா ஸ்நி பா தா;	; , ஸ ப ம பா : தா ;	பா, தபம கா, ரி ரீ ; ‖
. . சா. ரா . . ம னி	ச . . ரைச். . சே. . ரேன்	. . எ ன . . க்கி னி	தாழ்வி . . னி . யே ‖
ரீ ஸா—ஸரி ரீ மா மா மா	: பா பா பம தப தா ;	: பா பம பா ; தா :	பா, த ப ம கா, ரி ரீ ; ‖
. . தாழ் . வொன் . றில்லா	. மறை தா ழ் . . . ந்து	. த் ல . மு மு	துங்க . . வி . . யே ‖
ரீ ஸா—ஸரி ரீ கா ரீ ரீ	ஸா ; ஸா; ஸா ரிக ரிஸ	ꞈி.த ஸா ரீ ரீ ப ம பா தா	மபா த ப ம கா ரீ ரீ ; ‖
. . —ஆள் . கின் . ற	நாள் வந் த ளி. . .	. . த்தவன் காண் . . மின்.	அரங்கர் . . மௌ . லி ‖
; பநி த தா ம தபா ப தா	ஸ்ா, ஸ்ா, ரீ ஸ்ா ரீ ரீ	ஸ்ா ஸ்ா ஸ்ரி ரிக்ா ரி ரீ ஸ்ா	ஸ்ா; ரிக் ரிஸ் நிப தா : ‖
. சூழ் . கின். . ற . மா.	லே யைச் சூ . டி .	. கொ டு . த்த . . வள்.	தொல்ல . ரு . . . ளால் ‖
: ; பம பா தா ரீ ஸ்ா	ஸ்ா, ஸ்ா ரி ஸநி பா தா ;	; தப மா பத ரிஸ் நிப தா	பா, த ப ம கா, ரி ரீ ஸா ‖
வாழ் கின் . . ற	வள் ள . வி . . ரா	. மா . . னு . ச .னென்னும்	மா மு . . னி . யே. ‖



பழிக்குப்பழி

— ஏ. வி. ஆர். —

அந்தி மங்கும் வேளை. கதிரவன் தன் பொன்னிற கிரணங்களை அள்ளி வீசியவாறு வான வீதியில் பவனி வந்துகொண்டிருந்தான். தங்களுக்கு சரிநிகர் யாரும் இல்லையென்று பூக்கள் தலைநிமிர்ந்து சூரியனைப் பார்த்தவாறு சிரித்துக்கொண்டிருந்தன. தென்றல் காற்று பூக்களின் நறுமணத்தை சுமந்து ஒரு தனி இனிமையுடன் வீசிக்கொண்டிருந்தது. வேலூர் சிறைக்கூடத்தின் மணி "டண், டண்" என்று ஆறு முறை அடித்தது.

"பொழுதே போகவில்லையே. பாழாய்ப்போன ஜெயில் வாசம் இன்னும் எத்தனை நாட்களுக்கோ தெரியவில்லை" என்றான் கந்தசாமி.

"ஏனப்பா, நீ எதற்காக ஜெயிலுக்கு வந்தாய்" என்று கேட்டான் காளிமுத்து.

"வயிற்றுப் பிழைப்பில்லாமல் வேலையும் கிடைக்காமற் போனதினால், ஒரு குழந்தையின் சங்கிலியைத் திருடினேன். அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறேன். ஆமாம், நீ ஏன் இங்கே வந்தாய்?"

"நானா? பழிக்குப்பழி வாங்கினேன். அதனாலே வந்தேன்"

"பழிக்குப் பழியா! எனக்கு ஒன்றும் புரியவில்லையே. கொஞ்சம் விளக்கமாய் சொல்லப்பா."

"அது ஒரு பெரிய கதை தம்பி. இப்பொழுது சொல்லி முடியாது"

"அதையாவதுதான் சொல்லப்பா, பொழுதாவது போகட்டும்."

"என் துரதிருஷ்டமான சரிதையை உனக்குச் சொல்லி உன் மனதைக் கஷ்டப்படுத்துவதல்லாமல், என் எண்ணங்களையும் ஏன் கிளறிக்கொள்ள வேண்டும். வேண்டாமப்பா, என் கஷ்டம் என்னோடு தொலையட்டும்."

"அப்படியில்லை. ஒருவனுடைய கஷ்டங்களை மனதிற்குள்ளேயே வைத்துக்கொண்டு உருகுவது தவறு. அவைகளைப் பிறரிடம் சொன்னால்தான் மனத்தாங்கல் சற்றாவது குறையும். உம் சொல்லப்பா"

"ஆம்! நீ சொல்வதும் சரிதான். கதையைக் கேள்" என்று ஆரம்பித்தான் காளிமுத்து.

என் தாயார் இறக்கும்பொழுது எனக்கு வயது பதினாறு இருக்கும். என் தம்பி வேலனுக்கு வயது ஒன்பது. என்னைவிட நான்கு வயது அதிகமான என் அண்ணன் முருகனும் எங்களுடன் வசித்து வந்தான். என் தாயார் இறந்த சில மாதங்களுக்குப் பிறகு என் தகப்பனார் இரண்டாவது தாரம் கட்டிக்கொள்கிறேனென்று எங்களிடம் கூறினார். நாங்கள் மூவரும் அவர் சொன்னதை மறுக்கவில்லை, ஏனெனில் எங்களுக்கு சொத்தோ, நிலமோ சொந்தமாக இல்லை. நாங்கள் நால்வரும் கூலி வேலை செய்து பிழைத்து வந்தோம். அப்படிக் கூலிவேலை செய்யப்போகும்பொழுது வீட்டில் சமைக்க ஒருவரும் இல்லாததால், சமைப்பதற்காக ஒரு பெண் தேவை என்று அறிந்து, நாங்கள் என் தகப்பனார் கல்யாணம் செய்துகொள்வதை முழு மனதுடன் ஒத்துக்கொண்டோம். கல்யாணம் என்னவோ தடபுடலாக நடக்கவில்லை. பெண்ணுக்கு வயது அதிகமாயிருந்தபோதிலும், என் தகப்பனாரின் வயது நாற்பது என்பதை அறிந்து பெண் வீட்டார் சிறிதளவு கஷ்டப்பட்டனர். இதையறிந்த எங்கள் மனமும் சிறிது நொந்தது. ஒரு வருடம் உருண்டோடியது. எங்கள் குடும்பம் இன்பவாழ்விலேயே தவழ்ந்து சென்றது. சிறிது சிறிதாக எங்கள் சிற்றன்னையின் வெறுப்பு அதிகரித்தது. எங்களை மறைமுகமாகவும், நேர்முகமாகவும் தூஷித்து வந்தாள். நானும், என் தம்பியும் அவள் திட்டுவதை சகிப்போம். ஆனால் என் அண்ணன் சகிக்காமல் அவளை எதிர்த்தே பேசுவான். அவள் எங்கள் தகப்பனாரிடம் ஒன்றுக்கு இரண்டாக எங்களைப்பற்றிக் குறை கூறுவாள்.

அன்று என் தகப்பனார் ஏதோ காரியமாக வெளியே சென்றிருந்தார். என் சிற்றன்னை அண்ணனை காரணமில்லாமல் கோபித்துக்கொண்டாள். மனதில் புகைந்துகொண்டிருந்த பொறாமைத் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. அடாத வார்த்தைகளை உபயோகித்து, அவன் முகத்தில் காறியுமிழ்ந்தாள். கையிலிருந்த விறகு கட்டையை அவன் மீது கோபத்துடன் வீசி எறிந்தாள். விறகுக் கட்டையின் எறிதலை எதிர்பாராத என் அண்ணன் முகத்தில் பிறைச் சந்திரன்போல் காயம் ஏற்பட்டு ரத்தம் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது. வலி தாங்காமல் அவன் என் சித்தியை ஒரு அறை அறைந்தான். அதே சமயம் என் தகப்பனார் வீட்டினுள் நுழைந்தார். என் அண்ணனுடைய செய்கையைக் கண்டதும் அவர் கோபம் வரம்பு மீறி விட்டது. உடனே அவனை நன்றாக அடித்து, வீட்டை விட்டுத்

துரத்தி விட்டார். அன்று போன வனை நாங்கள் அதற்குப் பிறகு பார்க்கவேயில்லை.

நாட்கள் கழிந்தன. மாதங்களும், வருடங்களும் உருண்டோடின. என் அண்ணனுக்குச் செய்த துரோகத்தை எண்ணி என் தகப்பனர் மனம்நொந்து கடைசியில் தம் உயிரையும் அதற்கே பலியிட்டு விட்டார். எங்கள் சித்தி தன் பிறந்தகத்துக்கு சென்றுவிட்டாள். ஆதரவற்ற நானும் என் தம்பியும் என் தாய் மாமனை கருப்பண்ண கவுண்டரால் வளர்க்கப்பட்டோம். அவருக்கு சிறிது நிலம் இருந்தது. அதிலிருந்து வந்த தான்யம் எங்கள் குடும்பத்திற்குப் போதுமானதாய் இருந்தது. அவர் மனைவியும் இரண்டு வருடங்களுக்கு முன் பதின்மூன்று வயதான தன் மகள் செல்லியை விட்டுவிட்டு உயிர் நீத்தாள்.

நாங்கள் நால்வரும் சுகமாக காலங் கழித்து வந்தோம். என் மாமனுக்கு வயதாகிவிடவே அவர் வேலைக்கு செல்வதை நிறுத்திவிட்டார். ஆகையால் நானும் என் தம்பியுடன் அவருடைய நிலத்தைஉழுது பாதுகாத்து வந்தோம். சிறிது நாட்களுக்குப் பிறகு எனக்கும், செல்லிக்கும் கலியாணத்தை நடத்தி வைத்து மனம் குளிர்ந்தார்.

அதுவரையில் இன்பக்கடலில் அசையாமல் சென்றுகொண்டிருந்த எங்கள் வாழ்க்கை படகு திடீரென்று ஓர் சுழலில் மாட்டிக்கொண்டது. ஒரு நாள் எங்கள் மாமன், வீட்டிலிருந்து ஓடிவிட்டார். எங்கு தேடிப்பார்த்தாலும், காணமல் போகவே எங்கள் மனம் துணுக்குற்றது. அக்கம் பக்கத்திலுள்ளவர்களை விசாரித்தோம். ஊரெல்லாம் விசாரித்ததில் எங்கள் மாமனிடம் நாங்களில்லாத சமயம் கந்துக்கார குமாரசாமி வந்து, தான்கொடுத்த கடனை வட்டியுடன் மறுநாள் தர வேண்டுமென்றும், தர மறுத்தால் கோர்ட்டில் கேஸ் போடுவதாக பயமுறுத்தியதாகவும்தெரிய வந்தது. உடனே நாங்கள் கந்துக்காரனிடம் சென்றுவிசாரித்ததில், என் மாமன் அவருக்கு இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுக்க வேண்டுமென்றும், மற்றபடி அவர் எங்கு சென்றார் என்பது தெரியாதென்றும், அவரைப் பிடிக்கும் பொருட்டு போலீஸுக்கு தெரியப்படுத்துவதாகவும் சொன்னன். நாங்கள் அவனை அப்படிச் செய்ய வேண்டாமென்று எவ்வளவோ மன்றாடியும், அவன் மறுத்துவிடவே, வேறு வழியில்லாமல் நிலத்தை விற்று, அவன் கடனில் பாதியை அடைத்துவிட்டு, அவ்வூரை விட்டு, அருகிலுள்ள கோயமுத்தூர் டவுனுக்குச் சென்று அங்கு வசித்து வந்தோம். பாழும் விதி எங்களை அப்பொழுதும் விடவில்லை. செல்லிக்கு விஷ ஜுரம் வந்தது. அவ்வியாதியால் அவள் மிகவும் கஷ்டப்பட்டாள். அவளுக்கு சிச்ருஷை செய்து வந்த எனக்கும் அந்த வியாதி பற்றிக்கொண்டது. செல்லியும், நானும் எழுந்திருக்கச் சக்தியற்று படுத்த படுக்கையாய் இருந்தோம். செல்லிபிரக்ஞையற்று உளறிக்கொண்டிருந்தாள். என் தம்பி டாக்டர் வீட்டிற்குச் செல்வதும், மருந்து வாங்கி வருவதும், எங்களுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுப்பது மாகவே இருந்தான். அவன் அந்த சமயத்தில் இருந்திராவிடில் நாங்கள் இருவரும் ஒரே சமயத்தில் காலதேவனுக்குக் காணிக்கையாகி இருப்போம். அந்தோ! கொடுமையிலும் கொடுமை. ஊரில் எங்கு பார்த்தாலும் கலகம் ஆரம்பித்தது. கொலை, குத்து இவைகள் தண்ணீர் படும் பாடாய் இருந்

தது. காரணம் அப்பொழுதுதான் ஆகஸ்டுப் புரட்சி எழுந்தது. எங்கு பார்த்தாலும் பொதுக் கூட்டம் அங்கே சில நிமிஷ நேரத்திற்குள் தடியடியும் கண்ணீர் புகைப் பிரயோகமும் போலீசாரால் கையாளப்பட்டது. ஜனங்களின் மனக் குமுறல் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்து, ஆரவாரத்தையும் கலகத்தையும் அதிகாரிகளால் அடக்க முடியவில்லை. வீட்டிற்குள் அடைபட்டுக்கொண்டிருந்த எங்களுக்கு இவைகளை அறிய ஆவல் அதிகரித்தது. ஆனால், நாங்கள் இவைகளை வதந்திகள் மூலம் தான் அறிந்து வந்தோம். திடீரென்று கலகம் நின்றது. காரணம் எங்களுக்குப் புலப்படவில்லை.

அன்றிரவு எங்கும் ஒரே நிசப்தம் நிலவியிருந்தது, பார்ப்போருக்குப் பயத்தை உண்டாக்கியது. வீட்டில் செல்விக்கு ஜுரம் அதிகரித்தது. நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. எங்களுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. எனக்கு உடம்பு சிறிது குணமாகியிருந்தது. ஆனால், பயத்தினால் என்னால் எழுந்திருக்க முடியவில்லை. என் தம்பி தண்ணீர் காய்ச்சிக்கொண்டிருந்தான் செல்வியின் முனகல் அதிகரித்தது. நிலைமை மோசமாகிக்கொண்டே வந்தது. உடனே என் தம்பியை டாக்டர் வீட்டிற்குச் சென்று டாக்டரை அழைத்து வருமாறு அனுப்பினேன். போனவன் திரும்பி வரவில்லை. என் துக்கமும் கோபமும் அளவு கடந்து பெருக்கெடுத்தது. பயத்தினால் கைகால்கள் நடுங்க ஆரம்பித்தன. நாவறண்டது. கண்கள் இருண்டன, தாகம் அதிகரித்தது. தட்டுத்தடுமாறி தண்ணீர் காய்ச்சப்பட்ட இடத்திற்கு சென்று சிறிதளவு தண்ணீர் குடித்தபிறகு நடுக்கம் நின்றது. அணையும் தீபம் அணைவதற்கு முன்னால் பிரகாசமாக கொழுந்துவிட்டு எரிந்து திடீரென்று அணைவது போல் செல்வியின் முனகல் சப்தம் மிகவும் உச்சநிலையை அடைந்து திடீரென்று நின்றது. அறுந்தது அவளுடைய ஆத்ம வீணையின் வாழ்வுத்தந்தி. "ஐயோ! செல்வி" என்று அவள் சடலத்தின்மேல் சாய்ந்த என் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து அவளுடைய உடலை நனைத்தது. வாயில் வந்தபடி தம்பியை திட்டினேன். என் மனம் குழப்பம் அடைந்தது. விடியும்வரை ஏதேதோ நினைத்தவாறே துக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். சிறிது சிறிதாக விடிய ஆரம்பித்தது. என் தம்பி அப்பொழுது வராததைக் கண்டு, எங்கள் கஷ்டத்தை சகிக்கமுடியாமல் எங்கேயாவது ஓடியிருப்பான் என்று என்மனம் நினைத்து குமுறியது. அதுவரையில் ஒருவரையும் காணாத நான், என் வீட்டின் முன் ஒரு கூட்டம் கூடியிருந்ததைக் கண்டு வெளியே சென்றேன். அங்கே நான் கண்ட காட்சி! ஆஹா!! என்னால் சகிக்க முடியவில்லை. ஒருவேளை பிரமையோ என்று எண்ணியது என் மனம். பிரமையல்ல. உண்மை. முற்றிலும் உண்மை! ஆம். காலதேவன் என் வாழ்க்கையை பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டான். பழிக்குப் பழியா! அவனுக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? இல்லை. கடவுளுக்கு நான் உலகில் சந்தோஷமாயிருப்பது பிடிக்கவில்லை. வீணாக வளர்த்துவானேன். அங்கு என் தம்பி பிணமாகக் கிடந்தான். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பைத்தியம் பிடித்து விடும்போல் என் மூளை குழம்பி விட்டது. பக்கத்தில் நின்றிருந்தவர்களை விசாரித்தேன். அப்பொழுது அவ்வூரில் ஊரடங்குச் சட்டம் இரவில் போட்டிருப்பதாகவும், அந்த இரவில் என் தம்பி வெளியே சென்றதனால் ரிசர்வ் போலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டான், என்றும் அவர்கள் எனக்கு பதிலளித்தபோது, ஏன் அவனை டாக்டர் வீட்டிற்கு அனுப்பினோம் என்று தோன்றிற்று. பிறகு நான் அவர்களுக்குச் செய்ய வேண்டிய முறைப்படி சடங்குகளை செய்து முடித்தேன். அன்று முழுவதும் நான் சாப்பிடவேயில்லை. பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் சிறிதாவது சாப்பிடுமாறு வற்புறுத்தினர். நான் மறுத்துவிட்டேன். என் சிந்தனை பழைய நினைப்புகளை கிளப்பி விட்டது. முதல் நாள் நடந்த சமாசாரங்கள் என் கண்முன் தோன்றின. என் மனம் ரிசர்வ் போலீஸ் மேல் ஊர்ந்தது. ஆஹா! கொடுமைக் கிராதகர்கள்!! அவர்களால்தானே என்னுடைய குடும்ப வாழ்க்கையே குலைந்தது. ஐயோ! ஒரு ரிசர்வினால் இரண்டு உயிர்கள் கொலை. என் உடலில் ரத்தம்கொதித்தது, என் கண்கள் சிவந்தன. திடீரென்று ஒரு யோசனை. அஹ்ஹஹ்ஹா! பழிக்குப் பழி!! ரத்தத்திற்கு ரத்தம்!!! ஆம்: அந்தப் பாதகனை, எங்கள் குடியைக் கெடுத்த கோடரிக் காம்பை, பழிக்குப் பழி வாங்குவதுதான் என் முதல் கடமை என்று எண்ணியது என் மனம். பிறகு ஏதாவது ஒரு பிச்சுவா கத்தி கிடைக்குமோ என்ற எண்ணத்தினால் தூண்டப்பட்டவனாக வீடெல்லாம் தேடிப் பார்த்தேன். ஊஹூம். கிடைக்கவில்லை. உடனே கடை வீதிக்குச் சென்று ஒரு கத்தி வாங்கி வரலாமென்று எண்ணினேன். ஆனால், இந்தக் கோலத்தில் நான் சென்று கேட்டால் யாராவது என் மேல் சந்தேகப்படுவார்கள் என்று நினைத்த நான், என்னை சிறீது



"இந்தாங்க! இந்த வண்டியைக் கொஞ்சம் தள்ளனும் நீங்களும் ஒரு கை பிடிக்கிறீங்களா?"

"இதைத் தள்ளனுமாங்காட்டியும்! ஒரு கையிலே எடுத்துகிட்டு ஆட்லே கொணந்து போட்டுடறேன். என்ன தாறீங்க?"

அலங்கரித்துக் கொண்டு கடைக்குச்சென்றேன். கத்தியை வாங்கிக் கொண்டு திரும்பிய நான், வீட்டில் அதை வைத்து விட்டு, என் தம்பியை சுட்டுக்கொன்ற ரிசர்வ் போலீஸின் நம்பரையும், அவன் இரவில் நிற்கும் இடத்தையும் பக்கத்திலுள்ளவர்களிடத்தில் விசாரித்து தெரிந்து கொண்டேன். நான் எதிர்பார்த்த இரவும் வந்தது.

எங்கும் ஒரே நிசப்தம். ஜனங்கள் தங்கள் கவலைகளை மறந்து நித்திராதேவியின் அணைப்பில் கட்டுண்டு தப்ப முடியாமல் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தனர். மணி பன்னிரண்டு அடித்து சிறிது நேரத்தில் நான் கருப்பு உடை அணிந்து கொண்டு முகத்தையும் கருப்புத்துணியால் மூடிக்கொண்டு, மெல்ல மெல்ல அக்கிராதகன் இருக்கும் இடத்தை அடைந்தேன். என் கை துடிதுடித்தது. கண்கள் கோபக் கனலைக் கக்கின. உருவினேன் பிச்சுவாவை! கண்ணை மூடிக் கொண்டு போலீஸின் முதுகில் செலுத்தினேன். "ஐயோ என்ற கூக்குரல் கேட்டு என்மனம் திடுக்கிட்டது. பழக்கப்பட்ட குரல் போல் தோன்றவே, குனிந்து கீழே உயிரற்றுக்கிடக்கும் சவத்தை உற்றுநோக்கினேன், அப்பப்பா!! என்ன பரிதாபம்!!! பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும் என்ற பழமொழிக்கு உதாரணமாகிவிட்டதே என் வாழ்க்கை. ஆம். அங்கு என் கத்தி எவனுடைய ரத்தத்தை ருசி பார்த்ததோ, அவன் என் அண்ணன். "ஐயோ! அண்ணா" என்று என்னையறியாமல் கதறியவாறே அவன் சவத்தின் மேல் பிரக்ஞையற்றுச் சாய்ந்தேன். கண் விழித்தபோது நான் இந்தச் சிறையில் அடைபட்டுக் கிடந்தேன்.

இதுதான் என்னுடைய வாழ்க்கையில் உன்னதமான சம்பவங்கள்! சுகம் என்பதை என் வாழ்க்கை அகராதியில் கண்டு பிடிக்க யாராலும், ஏன் அந்த பிரமனாலும் முடியாது. அப்பேர்ப்பட்ட பாவி நான்!! என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே காளிமுத்து தன் கதையை முடித்தான்.

இடாஹோ ஸன்வாலியிலுள்ள ஆகாயமளாவி எழும்பிச் செல்லும் 'லிப்டு' இது. ஜனாதிபதி ட்ரூமன் தமது சுற்றுப் பிரயாணத்தின்போது இதில் ஏறிப்பார்த்தார். அவர் 'லிப்'டிலிருந்தபடியே வணக்கம் செலுத்துகையில் எடுத்த படம்.

அப்பொழுது அதே அறையில் ஒரு கிழஉருவம் விம்மும் சப்தம் கேட்டது. கந்தசாமியும், காளிமுத்துவும் சப்தம் வந்த திக்கை நோக்கி திரும்பினர். ஹா! மாமா!! நீங்களா!!! என்று கூவிக்கொண்டே காளிமுத்து அக்கிழவனின் கால்களில் வீழ்ந்தான். அப்பொழுது கிழவனின் கண்களிலிருந்து சிந்திய கண்ணீர் அவனை ஆசீர்வதிப்பதுபோல் அவனுடைய தலையில் வீழ்ந்தது.

10

சிவதர்மமும் சமதர்மமும்

★

பி. ஸ்ரீ.

தியாகேசர் என்பது திருவாரூர்ச் சிவபெருமானுக்கு வழங்கும் பெயர். தெய்வத்தின் தியாகம் தானே இவ்வுலகத்திற்குக் காரணம் ?

புனித ஒளி

அவ்வூர்க் கோயிலில் 'தேவாசிரியன்' என்னும் மண்டபம் ஒன்று உண்டு. அம்மண்டபத்தில் கூடி வீற்றிருக்கும் மகான்களான சிவனடியார்களைச் சேக்கிழார்,

பூசு நீறுபோல்
உள்ளும் புனிதர்கள்

என்று அறிமுகப்படுத்துகிருர். அவர்கள் பூசிக்கொள்ளும் தூய வெண்ணீறு உள்ளத்தின் தூய்மைக்கு அறிகுறியாக விளங்குகிறதாம்.

ஆத்ம சக்தி

அவர்கள் உள்ளத்திலிருந்து பொங்கும் ஞான ஒளி பட்சபாதமில்லாமல் எல்லாத் திசைகளையும் விளக்கி எல்லாருக்கும் பயன்படும் என்கிருர்.

தேசினுல், எத்
திசையும் விளக்கினுர்

மலை கலங்கினும் நிலை கலங்காதவர் என்று மனத்திண்மை படைத்தவர்களைச் சொல்லுகிருேமல்லவா ? சிவனடியார்களோ,

பூதம் ஐந்தும்
நிலையில் கலங்கினும்,
மாதொர் பாகர்
மலர்த்தாள் மறப்பிலார்,
ஓது காதல்
உறைப்பின் நெறிநின்றுர்.
கோதி லாத
குணப்பெருங் குன்றனுர்.

[மாதொர்பாகர்–சிவபெருமான். மலர்த்தாள்–மலரடிகள். கோது இலாத–குற்றம் இல்லாத]

சிவனடியார்களின் மனத்திண்மை சிவபக்தியில், அடியவர்–காதலில் வேரூன்றி நிற்கிறது. தங்கள் பக்தியால் இந்தப் பக்தர்கள் குணமென்னும் குன்றுகளாக நிற்கிருர்களாம். 'குணமென்னும் குன்றேறி நின்றுர்' என்று, நற்குணத்தில் உயர்ந்து விளங்குகிறவர்களைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிருர். அத்தகைய நற்குண நற்செயல்களுக்கும், நல்லொழுக்கத்திற்கும் பக்தியே அடிப்படை என்பது சேக்கிழார் குறிப்பு. இத்தகைய பக்தர்களின் மனத்திண்மை ஆத்ம சக்திதான்.

உண்மைச் செல்வம்

இந்தப் பக்தர்களே உண்மைப் பெருஞ் செல்வர்கள் :

கேடும் ஆக்கமும்
கெட்ட திருவினுர்,
ஓடும் செம்பொனும்
ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில்
கும்பிட லே அன்றி,
வீடும் வேண்டா
விறலின் விளங்கினுர்.

[கேடு–(இங்கே) பொருளில்லாத வறுமை. ஆக்கம்–பொருட்செல்வம். வீடு–முக்தி. விறல்–வலிமை.]

ஸ்தூலமாகப் பார்த்தால், இவர்கள் செல்வர்களல்லர், வறியவர்களுமல்லர்; எனினும் இந்த இரண்டும் கெட்ட இவ்வன்பர்களே செல்வர்கள்!— என்கிருர் சேக்கிழார். இவர்களுக்குப் பொன்னும் ஓடுதான்; ஓடும் பொன்தான்! இப்படிப் பொருட்செல்வத்தில் மயங்காத இவர்கள் மோட்சம் என்ற செல்வத்தைத்தானே விரும்புகிருர்கள் என்றுல், விரும்பமாட்டார்களாம்.

அன்புச் செல்வம், அதன் பயனுகிய கைங்கரியச் செல்வம் என்ற இந்த இருவகைத் தனிப் பெருஞ்செல்வம் தவிர, வேறு செல்வம் ஒன்றும் இவர்களுக்குத் தேவையில்லையாம்.

ஒன்றுமே வேண்டா(து)
உலகனைத்தும் ஆளுவர்காண்!

என்று பாரதியார் பாடியிருக்கும் 'ராஜகுல'த்தைச் சார்ந்தவர்கள் இத்தொண்டக்குலத்தினர்.

உண்மை வீரம்

'இவர்களே செல்வர்கள்' என்று கூறும் சேக்கிழார், 'இவர்களே வீரர்' என்றும் சொல்லுகிருர்:

ஆரம் கண்டிகை
ஆடையும் கந்தையே;
பாரம் ஈசன்
பணி அல(து) ஒன்றிலார்;
ஈர அன்பினர்,
யாதும் குறைவிலார்
வீரம் என்னுல்
விளம் புந்தகையதோ?

[கண்டிகை - ருத்திராட்ச மாலை பணி — தொண்டு. ஈர அன்பினர் - இரக்கத்தோடு கூடிய அன்புள்ளவர்கள்.]

உண்மைப் பணி

இப்பாட்டில் ஈசன் பணியை வற்புறுத்தும் சேக்கிழார், 'ஈர அன்பினர்' என்ற குறிப்பால் 'அன்பர் பணி'யையும் வற்புறுத்துகிறார். ஈசன் இருக்கும் கோயில்களில், 'நடமாடும் கோயில்'களே அடியார், மெய்யன்பர். மேலும் அடியார்க்கு மட்டுமல்ல, எவ்வுயிர்க்கும் அன்பாய் இருந்து பணி புரிவதே ஈர அன்பினர் தொழில்—அன்பர் பணி.

எவ்வுயிரும் நீங்கா(து)
உறையும்இறை சிவன்
என்று,
எவ்வுயிர்க்கும் அன்பாய்
இரு

என்று சைவ சமயம் போதிக்கிறது.

தன்னகத்திலுள்ள சிவமே எல்லா உயிர்களிலும் வீற்றிருப்பது என்பதை உணர்ந்து ஒவ்வொருவனும் எல்லா உயிரையும் தன்னுயிர்போல் கருதிப் பணிபுரிய வேண்டும்; எல்லா உயிர்களிடத்திலும் அஹிம்சை நெறியில் நடந்துகொள்ள வேண்டும். பிறர் அறியாமையால் ஹிம்ஸை செய்தாலும், அன்புடன் பொறுத்துக்கொள்ள வேண்டும். இது ஹிந்து தருமத்தின் ஸாரமான கொள்கை. சைவசமய நன்னெறியும் இதுவே.

இத்தகைய நிலையை அடைவதற்குப் பக்தியே அடிப்படையாகும் என்பது சைவ வைணவ பக்தி மதங்களின் கருத்து. சிவஞான சித்தியார் என்ற நூல், 'ஈசனுக்கு அன்பில்லார், அடியவர்க்கு அன்பில்லார். எவ்வுயிர்க்கும் அன்பில்லார். தமக்கும் அன்பில்லார்!' என்று எவ்வளவு தெளிவாகப் பக்தியின் அவசியத்தை வற்புறுத்துகிறது!

வேடமும், ஸாரமும்

இப்படிச் சைவ சமயசாரத்தை உணர்ந்துகொள்வது முக்கியமானது: வெளிவேடம் போதாது—என்பது சேக்கிழாரின் உள்ளம். வெளிவேடக்காரர்களை நோக்கிச் சிவனடியார்களே, 'நீற்றைப் புனைந்தென்ன?' என்றும், 'திருநீறு குழைக்கும் கள்ளர்' என்றும் பரிகசித்திருக்கிறார்கள். சமய வேடங்களும், கோலங்களும் காலதேசவர்த்தமானங்களுக்கு ஏற்றபடி மாறக்கூடும்; ஆனால் சீலமும், சமய உண்மையும் இன்றியமையாதன என்பதை சேக்கிழார் கொள்கையென்று கருதலாம்.

அந்தணர் யார் ?

இத்தகைய சிவநேசர்களில் ஆலாலசுந்தரர் என்ற சுந்தரமூர்த்தி சுவாமியும் ஒருவர். இவர், அடியார் கூட்டத்தின் மாட்சியை அறுபத்துமூன்று நாயன்மார்களின் மாண்பாகத் தமது திருத்தொண்டத்தொகையில் பாடியிருக்கிறார்.

தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்

என்று திருவாரூர்த் தியாகப் பெருமானே அடியெடுத்துக் கொடுத்தாராம் சுந்தரமூர்த்தி சுவாமியின் திருத்தொண்டத் தொகைக்கு.

நல்லது; தில்லைவாழ் அந்தணர்கள், நடராஜப்பெருமானின் தொண்டையே தங்களுக்கு உரிய பெருந்தவமாகக் கொண்டவர்கள்.

இவர்களைத்,

தருமமே பொருளாக்கொண்டு
தத்துவ நெறியில் செல்லும்
திருவருட்செல்வர் என்றும்;
மறுவிலா மரபின் வந்து
மாறிலா ஒழுக்கம் பூண்டார்,
அறுதொழில் ஆட்சியாலே
அருங்கலி நீக்கி உள்ளார்!
மானமும் பொறையும்தாங்கி
மனை அறம் புரிந்து வாழ்வார்.

[அறுதொழில்—ஓதல், ஓதுவித்தல் முதலான ஆறுதொழில்கள்.] என்றும்,

[பொறை—பொறுமை.]

என்றும் சேக்கிழார் வருணித்திருக்கிறார். இதனால் சேக்கிழார் காலமாகிய பன்னிரண்டாவது நூற்றாண்டிலும் தில்லை மூவாயிரவர் பொதுவாக அன்பிலும், ஞானத்திலும் ஒழுக்கத்திலும் பணியிலும் பண்பாட்டிலும் சிறந்து, சாதி—அந்தணர்களாகமட்டுமில்லாமல், உண்மையான அந்தணர்களாகவும் வாழ்ந்தார்கள் என்று ஊகஞ்செய்யலாம்.

சுந்தரமான சமதர்மம்

'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை, இந்த அந்தணாளர்களுக்குச் சரி நிகர் சமானமாகவே திருநீலகண்டத்துக் குயவனாரையும் சிறப்பித்து பேசுகிறது:

தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்;
திருநீல கண்டத்துக்
குயவனார்க்(கு) அடியேன்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சாதி விஷயமாகக்கொண்டிருக்கும் சமதர்மத்தைப் பாருங்கள்.

கலைமலிந்த சீர்நம்பி
கண்ணப்பர்க்(கு) அடியேன்

வேடராகிய கண்ணப்பரை, என்று குறிப்பிடுவதைத்தான் பாருங்கள். கல்வியில்லாதவர், 'கலைமலிந்த'வர் என்று போற்றப்படுகிறார்! ஓதாதுணர்ந்த உயர் ஞானியாகிவிட்டாராம் கண்ணப்பர், பக்தியின் அதிசய ரஸவாதத்தினால், அந்தணருக்கும், குயவருக்கும் இடையே கண்ட சமதர்மம் போல், பண்டித பாமரர்களுக்கும் இடையே கண்ட சமதர்மம் இது!

நாயன்மார் திருக்கூட்டத் தலைவரான திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமியை,

எம்பிரான் சம்பந்தன்
அடியார்க்கும் அடியேன்.

என்று வழிபடுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமி; அப்பர் சுவாமிகளை,

திருநின்ற செம்மையே
செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன் தன்
அடியார்க்கும் அடியேன்

என்று அடிபணிகிறார். நந்தனாரையும்,

செம்மையே திருநாளைப்
போவார்க்கும் அடியேன்

என்று அடிதொழுகிறார்.

'சம்பந்தன்' என்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளையும், திருநாவுக்கரையன்' என்று திருநாவுக்கரசு சுவாமிகளையும் குறிப்பிடுகிறவர், 'திருநீலகண்டத்துக் குயவனார்' என்றும், 'கண்ணப்பர்' என்றும், 'திருநாளைப் போவார்' என்றும் இந்த நாயன்மார்களை மரியாதைப் பன்மையில் குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது.

பத்தராய்ப் பணிவார்கள்
எல்லார்க்கும் அடியேன்

என்ற சுந்தரமூர்த்திகளின் சைவ சமதர்மம், 'தாழ்குலத்தவர்' என்று ஒதுக்கப்பெற்ற பக்தர்களை விசேஷமாய்க் கௌரவிக்கிறது என்றாலும் தவறாகாது.

பல தேசங்களில் பல வேடம் கொண்டு பக்தி செய்கிறவர்களையும், அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்' என்று போற்றுகிறது சுந்தரமூர்த்திகளின் சமதர்மம். இந்தச் சமதர்ம உலகின் அகலமும், நீளமும் உயர்வும் ஆழமும் எவ்வளவு அதிசயமானவை!

அட்டைப்படம்

★

காஷ்மீரில் நவஷாராபோராட்டத்தில் இந்தியப் படையினர் அடைந்த வெற்றி மகத்தானது. அதை யாரும் மறப்பதற்கில்லை. அந்த இந்தியத் துருப்புகளுக்குத் தலைமை தாங்கி இயக்கியவர் வீரர் ஊஸ்மான். காஷ்மீரத்தின் சுதந்திரத்துக்காக அவர் தமது உயிரையே அர்ப்பணித்து விட்டார். அவர் தமது மரண நிலைமையில் சொல்லிப் போன வார்த்தைகள் இந்தியத் துருப்பினர் மனத்தை நெகிழச் செய்யும். அத்தகைய வீரபுருஷனின் உதாரணம் தலைமுறை தலைமுறையாக பின்பற்றத் தக்கதாகும். பிரிகேடியர் ஊஸ்மானின் படமே இவ்விதழின் அட்டையில் தோன்றுவது.

சிதம்பரம் சம்ஸ்கிருத சிரோமணி பண்டிட் ஸ்ரீ பி. எஸ். மகாதேவ சாஸ்திரிகள் புதல்வி சௌ. சிவகாம சுந்தரிக்கும், திருவண்ணாமலை "மித்திரன்" நிருபர் ஸ்ரீ வி. வி. திலக் சாஸ்திரி சகோதரர் வி. வி. கிருஷ்ணமூர்த்திக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.



மாதர் மகா சபை

குங்குமம்

"என்ன யோசனை? வா, கொஞ்சநாழி பேசிவிட்டுப் போகலாம், நானும் வருகிறேன்' என்று தன்னுடன் வந்த பேபியை, ருக்குவின் அகத்தினுள் வரும்படி கூப்பிட்டாள் சரோஜா.

'இல்லையடி. நான் சீக்கிரம் போகவேண்டும். நாளைக்கு வருகிறேன்' என்று சொல்லிவிட்டு பேபி போவதற்குக் கிளம்பினாள்.

இதற்குள் ருக்கு தெருப்பக்கம் வந்து 'ஏன் மாமியை அனுப்பி விடுகிறாய்?' என்று சரோஜாவைக் கேட்டாள்.

'என்ன மாமி, உங்களை நான் அனுப்பி விடுகிறேனாமே?' என்று பேபியைப் பார்த்து சிரித்துக்கொண்டே சரோஜா கேட்டாள். அப்பொழுது பேபியின் முகத்தில் அசடு வழிந்ததை சரோஜா கவனிக்காமல் இல்லை. சரோஜா ஒன்றும் அனுப்பவில்லைமாமி, நானாகத் தான் போகிறேன். கொஞ்சம் வேலை இருக்கிறது. அதனால் தான் போகிறேன். இல்லாவிட்டால் வருவதற்குக் கிராக்கியா என்ன? நாளைக்குக் கட்டாயம் வருகிறேன்' என்று ருக்குவிடம் பதில் சொல்லிவிட்டு பேபி போய்விட்டாள்.

சரோஜாவும், ருக்குவும் உள்ளேவந்து சேர்ந்தார்கள்.

'யாரடி அது?' என்று கேட்டாள் ருக்கு.

'நல்ல கெட்டிக்காரியடியம்மா நீ' என்றாள் சரோஜா.

"ஏன்? என்ன ஆபத்து வந்துவிட்டது?"

'அந்தமட்டோடு விட்டாயே, அதுவே போதுமடியம்மா. வாயிலே பல்லிலே ஈரமே இல்லை எனக்கு. நிஜமாகச் சொல்கிறேன்.'

'ஏன் இன்னும் என்னென்ன கேட்டிருப்பேன் என்று நினைக்கிறாய்?'

'உனக்குப் பிள்ளை எத்தனை? பெண் எத்தனை? அகமுடையானுக்கு எங்கே உத்யோகம்? மாமியார், மாமனார் இருக்கிறார்களா? என்ற விவரங்களையெல்லாம் கேட்காமல் மாமி என்ற வார்த்தையோடு விட்டாயே'.

'ஏன், மாமி என்று சொல்லாமல் அவளை பின் என்னவென்று சொல்லவேண்டுமென்கிறாய்?'

'வெறும் மாமி என்று கூப்பிடக் கூடாது. அம்மாமி என்று கூப்பிட வேண்டுமென்கிறாள்' என்றாள் பானு.

'மாமியுமில்லை, அம்மாமியுமில்லை. இன்னும் 'அதற்கு' கலியாணமே ஆகவில்லையடி, என்றாள் சரோஜா.

'கல்யாணமாகவில்லையா? நிஜமாக

ருக்கு சொல்லுகிறாள்

★

சாந்தா நானடி என்று சொன்னால் இல்லை வேறு யாரோ என்று சொன்னாயே? யார் வந்து நிற்கிறது பார்த்துக் கொள். என்றேன் சரோஜாவிடம்.

'எப்படியடி அவ்வளவு தூரத்தில் வரும்போதே சொல்லி விட்டாய்?' என்றாள் சரோஜா.

'இது ஒரு ஆச்சரியமா? சாந்தாவுக்குத்தான் இந்த நாகரிகமெல்லாம் தெரியும் என்றேன்.

'என் கையில் இந்தப் பையைப்பார்த்துவிட்டுச் சொல்கிறாயாக்கும். தெரியுமே எனக்கு என்றாள் சாந்தா.

இல்லாமலென்னடி கிழங்களே நாகரிகம், நாகரிகம் என்று சொல்லி என்னென்னவோ அவலக்ஷணம் செய்துகொள்கிறதுகள். அப்படியிருக்க சிறிசுகளுக்கு நாகரிக மோகம் இல்லாமலிருக்கமுடியுமா? இருந்தாலும் சற்றேறக்குறைய நமக்கு அந்த வேஷம் பொருத்தமாக இருக்குமா என்று பார்க்க வேண்டாமோ? நீ தவிர வேறு யார் இவ்வளவு பெரிய தோல் பையைக் கையில் எடுத்துக்கொண்டு வருவார்கள். பை எடுத்துக்கொண்டு வரவேண்டாமென்று சொல்லவில்லை. சிறியதாக பார்ப்பதற்கு லக்ஷணமாக எடுத்துக்கொண்டு வரக்கூடாதோ? என்றேன்.

'உண்மையிலேயே சிறிசுகள் சிறிய பைகளை எடுத்துச் சென்றால்தான் நன்றாக இருக்கிறது' என்றாள் சரோஜா.

வா?' என்று மூக்கில் விரல் வைத்தாள் ருக்கு.

'நிஜமாதான். இன்னும் கலியாணம் ஆகவில்லை' என்றாள் சரோஜா.

'வயசு 24, 25, இருக்கும் போலிருக்கிறதே' என்றாள் ருக்கு.

'மீதியெல்லாம்?' என்றாள் சரோஜா.

'அப்படியென்றால் இன்னும் அதிக வயசாகிறதென்று சொல்கிறாயா?' என்றாள் பானு.

இந்த ஆனிக்கு இருபத்தி ஆறு முடிந்துவிட்டது!

'நன்றாக இருக்கிறது. இருபத்தி ஆறு வயசாகி இன்னுமா கலியாணமாகவில்லை?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஆகவில்லையே. அவளுடைய தகப்பனாரும் பாவம் பத்து வருஷமாக அலைந்து அலைந்து அவருக்கும் அலுத்துப் போய் விட்டதாம்' என்றாள் ருக்கு.

'படித்த பெண்ணோ?' என்றாள் பானு.

'எல். டி பாஸ் செய்து வாத்தியாராக இருக்கிறாள்' என்றாள் சரோஜா.

'சரிதான். அப்படியென்றால் மேற்கொண்டு பேச்சுக்கே இடமில்லை' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஏன் மாமி, அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?' என்றாள் வசந்தா.

'இனி அவள் கலியாணத்தைப்பற்றி பெற்றோர்களுக்கு எதற்கு அக்கரை?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஏன் அவர்களுக்கு இல்லாமல் வேறு யாருக்கு அக்கரை?' என்றாள் பானு.

எவனையாவது ஒருவனைப் பார்த்து அவளே ரிஜிஸ்தர் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதுதான். இந்தமாதிரி தானே இப்பொழுதெல்லாம் நடைபெறுகிறது?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஏன் இவ்வளவுநாள் கலியாணம் ஆகவில்லை? பார்ப்பதற்கு நன்றாக லட்சணமாக இருக்கிறாள். நல்ல படிப்பும் இருக்கிறது என்றாள் ருக்கு.

'அந்தப் படிப்புதான் அவளுக்குச் சத்துருவாய் வந்து சேர்ந்தது என்கிறார் அவளுடைய தகப்பனார் என்றாள் சரோஜா.

ஏன் என்ன சொல்கிறார்? என்றாள் ருக்குவின் மாமியார்.

நேற்று எங்கள் அப்பாவுடன் பேசிக்கொண்டிருந்தார் அவளுடைய தகப்பனார். பாவம் மனுஷ்யன் இதே விசனமாக இருக்கிறார். அவருக்கு பேபி ஒரே பெண்ணும். ஒரு பிள்ளை இருக்கிறானும். நல்ல சொத்து இருக்கிறது. அவர் ரெவின்யூபோர்டு ஆபீஸில் சூப்பரிண்டெண்டாக இருந்து ரிடையர் ஆனவர். பேபியின் தாயாரும் பெரிய இடத்தைச் சேர்ந்தவள். நல்ல படிப்புயுள்ளவள். அதனால் பெண்ணையும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டுமென்று ஒரு கான்வெண்ட் ஸ்கூலில் சேர்த்தார்கள் பேபியை. பேபியும் நல்ல புத்திசாலி. படிப்பில் நல்ல கவனம் செலுத்தி ஒவ்வொருவகுப்பிலும் முதலில் தேறிவந்தாள். 15-வது வயதில் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தாள். பிறகு தகப்பனார் பேபியின் கலியாண விஷயத்தைப்பற்றி ஆலோசிக்க ஆரம்பித்தார். படிப்பை இத்துடன் நிறுத்திவிடுவதா, மேலே படிப்பதா என்ற பிரச்னை கிளம்பிற்று. நன்றாகப்படிக்கும் பசங்கள் மேலே படிக்க வேண்டியதுதான் என்றார்கள் அக்கம்

"...என்ன மாமி உங்களை அனுப்பி விடுகிறேனாமே?..."

பக்கத்து மனுஷ்யர்கள். பேபியும் காலேஜில் சேர்ந்து படித்துத்தான் ஆகவேண்டுமென்றாள். என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில் ஏன் கலியாணமே வேண்டாமென்று பேபி சொல்லவில்லையோ? இந்த மாதிரி கட்டங்களில் இந்தக் காலத்தில் ரொம்ப பசங்கள் இந்த மாதிரி சொல்லிக்கொண்டிருக்கிறதுகளே என்றாள் ருக்குவின் மாமியார்.

'அப்படியேதான் சொன்னாளாம். வீட்டில் கலியாணத்தைப்பற்றிய பிரஸ்தாபம் ஏற்பட்டபோது, இப்பொழுது அதைப்பற்றி ஒன்றும் பேசாதீர்கள். பி. ஏ. பாஸ் செய்த பிறகுதான்' என்று சொல்லிவிட்டாளாம். சரி என்று இருந்துவிட்டார்கள் பெற்றோர்கள், என்று சரோஜா சொல்கையில்'' வேறுவழி! இந்தக்காலத்துப்பசங்கள் வார்த்தைக்குக் குறுக்கே சொல்லி யாரால் மிகுந்து வரமுடியும்? அதது மனம்போனபடி விட்டுவிட வேண்டியதைத்தவிர வேறு வழியில்லை.'' என்றாள் ருக்கு.

'அதன் பலாபலன்களை அதுகள் அனுபவிக்காமலும் இல்லை' என்றாள் ருக்குவின் மாமியார்.



''...அம்மாமிகளை...''

'' குடுமி வைத்துக்கொண்டு கர்னாடகமாய்...''

'அதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். அதற்குள் அவசரப்படுகிறீர்களே. சரி என்று பேபியின் இஷ்டப்படி விட்டுவிட்டார்களாம். பி. ஏ. பாஸ் செய்துவிட்டாள். கலியாணப் பேச்சு ஆரம்பமாயிற்று. எந்த வரனைப் பார்த்தாலும் சில தகப்பனாருக்குப் பிடிக்கவில்லை. சில தாயாருக்குப் பிடிக்கவில்லை. பல வரன்கள் பேபிக்குப் பிடிக்கவில்லை' என்றாள் சரோஜா.

'பணமிருந்தால் படிப்பில்லை. பணமும் படிப்புமிருந்தால் அழகில்லை. அழகிருந்தால் குலம் கோத்திரமில்லை' என்று விமலா சொல்கையில், ,பணம், படிப்பு, அழகு, குலம் கோத்திரமிருந்தால் பிள்ளை குடுமி வைத்துக் கொண்டு கர்னாடகமாக இருக்கிறான்' என்றாள் ருக்கு.

'இந்தக் காலத்தில் குடுமி கூட இருக்கிறதா என்ன?' என்று ஆச்சரியம் தொனிக்கும் குரலில் கேட்டாள் விமலா.

'அப்படியும் சில பிரகிருதிகள் இருந்துகொண்டுதான் இருக்கிறதுகள்' என்றாள் ருக்கு.

'கொஞ்ச நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் ஒரு விஷயம் பார்த்ததாக ஞாபகம். ஆஸ்திரேலியாவிலோ எங்கோ ஞாபகமில்லை. ஒரு காட்டில் சில ஜாதியினர் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்த இரண்டாவது உலக யுத்தம் நடந்ததே தெரியாதாம், அவர்களுண்டு. அவர்கள் வேலையுண்டு. வெளி உலகத்தோடு ஒருவிதமான தொடர்பும் கிடையாதாம். வெளி உலகத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ளக் கூப்பிட்டாலும் வரமாட்டேனென்கிறார்களாம். அந்தநாகரிகமும் அதன் அழிக்கும் சக்திகளும் உங்களோடு இருக்கட்டும். எங்களுக்கு இந்த ஏகாந்த வாழ்க்கையே போதும் என்று சொல்லிவிட்டார்களாம், என்று சாந்தா சொல்லுகையில்' இந்தக்குடுமிப் பேர்வழிகளை அந்த கோஷ்டியில் சேர்த்துவிட்டாய்? என்றாள் ருக்கு.

இல்லாமலென்ன? இப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான நாகரிக உலகத்தில் கொஞ்சமும் அசைந்து கொடுக்கவில்லை யென்றால் இவர்களுடைய மனோ உறுதிக்கு இவர்களை வேறு யாருடன் ஒப்பிடச் சொல்கிறாய்? என்றாள் சாந்தா.

இது கிடக்கட்டுமடி நீ மேலே சொல்லடி சரோஜா என்றாள் ருக்குவின் மாமியார்.

வரன் தேடியதில் தான் பட்ட கஷ்டத்தை யெல்லாம் சொல்லிவிட்டு, ரஸமான ஒரு

''......கண்டு.........''

விஷயத்தைச் சொன்னார் பேபியின் தகப்பனார். அவர் சொன்னார்: உலகத்திலே வரன் தேடுவதில் இத்தனை நாட்களாக இல்லாத ஒரு சிக்கல் இப்போது ஏற்பட்டிருக்கிறது. பெண்களுக்கு பதினெட்டு அல்லது இருபது வயது நிரம்பியவுடனே தானே கலியாணப் பிரயத்தனம் ஆரம்பமாகிறது. அதுவரையில் படிப்பில் கவனம் செலுத்தியாகி விடுகிறது. 22, 23 வயதுப் பெண்களை வைத்துக்கொண்டு வரன் பார்க்கப்போனால், அதற்குத் தகுந்ததாக 30, 32 வயதுப் பிள்ளைகள்வேண்டுமோலியோ? எல்லாம் 24, 25 வயதுக்குட்பட்ட பிள்ளைகளாகவே இருக்கிறதுகள். சிறிசுகள் தானே பாவம்! 'அம்மாமிகளை'க் கலியாணம் செய்துகொள்ளப் 'பயப்படுகிறதுகள்.' நான் பார்த்த வரன்களில் 100–க்கு 99 இப்படித்தான் இருக்கிறது. இவ்வளவு பெரிய பெண்ணா? வயசுப்பொருத்தம் அடியோடு இல்லை' என்று பிள்ளைவீட்டுக்காரர்கள் சொன்ன பதில்தான் அதிகமாக இருக்கிறது. இதற்காகப் பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்யாமல் 30, 35 வயசு வரையில் வைத்திருப்போமென்றால் 'இவ்வளவு படிப்பு, பணம், அழகு எல்லாம் இருக்கிறது. உலகிலோ பெண்கள் மலிந்துபோய் அவரவர்கள் பிள்ளையென்று ஒன்று அகப்பட்டால் போறுமென்று தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் இவ்வளவு வயசாகியும் இந்தப் பிள்ளைக்கு ஏன் இன்னும் கலியாணமாகவில்லை? இதில் ஏதோ ஒரு 'சொள்ளை' இருக்கிறது' என்று ஒரு மூலையில் ஒரு முணுமுணுப்பு ஏற்பட ஆரம்பிக்கிறது. பெண்களுக்கு வயசு ஆகஆகத்தான் வரனே அகப்படவில்லை என்ற ஒரு பல்லவி இருக்கிறது. பிள்ளைக்கு அப்படியெல்லாம் ஒன்றும் சொல்வதற்கில்லை பாருங்கள்!' என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கையில், 'அதாவது' 'அம்மாமிகளுக்குத்தகுந்த அம்மான்கள் அகப்படவில்லை. எல்லாம் மருமான்களாகவே இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள்!' என்றார் அப்பா.

'அதுதான் ஸாரம்!' என்று பேபியின் தகப்பனார் சொல்லிவிட்டு, 'வரவர உலகம் போகிற போக்கைப் பார்த்தால் இனி வரன் தேடுவதில் முக்கால் பங்கு வரன்கள் (பிள்ளைகள்) பெண்களுக்குக் குறைந்த வயசுள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். சரியான வரன் அமையாத கஷ்டங்களில் இதுதான் இனி முக்ய கஷ்டமாக இருக்கப்போகிறது,' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாராம்.

'காலாகாலத்தில் கலியாணம் செய்யும் விசாரமே இல்லாமல் இப்படிக் குதிரை குதிரையாகப் பெண்களைவைத்துக்கொண்டிருந்தால் அப்படித்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கும்' என்று அப்பா பதில் சொல்லிவிடலாம் என்றுபார்த்தாராம்; அதைச் சொல்லிவிட்டு மனுஷ்யன் மனதை அனாவசியமாகப் புண்படுத்துவானேன் என்று எண்ணிக்கொண்டு 'இருக்கட்டும் இருக்கட்டும். இதெல்லாம் நல்லதுக்குத்தான். அதது மனம் போனபடி ஆடி ஓடிப் பார்த்துவிட்டுக் கடைசியில் பழைய இடத்துக்கே வந்து சேருங்கள்' என்றார் அப்பா.

'இதெல்லாம் தெரியாமலா நம்ம பெரியவர்கள் கலியாணத்துக்கு வயசு கிரமத்தைக் குறிப்பிட்டிருந்தார்கள்! உங்கள் அப்பா சொல்கிறமாதிரி என்னமோ, எதையோ நினைத்துக்கொண்டு பிரமாதமாக உலகத்திலேயே என்றுமே கண்டிராத ஒருபெரிய சீர்திருத்தத்தைச் செய்துவிடப் போவதாகத் தலைகால் தெரியாமல் 'ஓடிக்கொண்டிருக்கிறதுகள். ஓடட்டும், ஓடட்டும். நம்ம பெரியோர்கள் ஓடிப் பார்த்து கழித்துவிட்டதுதான் இதெல்லாம். கொஞ்ச நாளானால் எல்லாம் சரியாகப் போய்விடும். அதுவரையில் அதுகளை நம்மால் தடைசெய்யவும் முடியாது என்றாள் ருக்குவின் மாமியார்.

அப்படியானால் நாளைக்கு பேபி வந்தால் அவளை என்னவென்று கூப்பிடச் செல்லுகிறாய்? என்றாள் ருக்கு.

நல்ல கேள்விதான். எனக்கு இன்று கொஞ்சம் வீட்டில் அவசர வேலை இருக்கிறது. நாளைக்கு யோசனை செய்துகொண்டுவந்து பதில் சொல்கிறேன் என்று எழுந்தாள் சரோஜா.

———

கேச விருத்திக்கு சிக்கன சுலப சாதனம்

காஷ்மீர்-குஸும்

வேண்டிய எண்ணெயில் கலந்து கொள்க

குடும்ப சரும-சஞ்சீவி
ஸான்டலக்ஸ்
நருமண சந்தனக்கழிம்பு

மைசூர் M.R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா
உயர்தர ஊதுவத்திகள்

ஸோல் ஏஜண்ட்: யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதராஸ். 1

டிப்போக்கள்:— மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

மாமா சிவராமன் செல்லத்தின் படிப்பறையில் உட்கார்ந்துகொண்டு அவளுடைய "கிளாஸ்" புஸ்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தார். ஆனால் அவருடைய நினைவுகள் அலைந்துகொண்டிருந்தன. பள்ளிக்கூடப் பாடப் புஸ்தகங்களில் அவருக்கு ஒன்றும் விசேஷ சிரத்தை கிடையாது. எடுத்த புஸ்தகம் என்னவென்றுகூட அவர் நிதானித்துப்பார்க்கவில்லை. ஆனால் புஸ்தகங்களை எடுப்பதும் பிரிப்பதும் வைப்பதுமாகக் காலம் கழித்தார். செல்வம் ஸ்நான போஜனாதிகளுக்கு மத்தியில் அறையில் நுழைந்தபோது அவர் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதும் போவதும் வருவதுமாயிருந்தாள். பின்பு பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டுவிட்டாள். மாமா சிவராமன் மனதில் சங்கரி அம்மாளின் பேச்சு தோரணை ஒரு புயலை எழுப்பிவிட்டிருந்தது. ஒரு இரவு சென்றும் அது ஓயவில்லை. சினிமா பார்த்ததிலும் அது அடங்கவில்லை. ஸீதாராமன் அவருக்கு ஒரு விரோதியாய்த் தோன்றினன். ஸீதாராமனிடம் தன் அக்காவுக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையையும், பிரீதியையும் மதிப்பையும் பாதிக்கும் வகையில் தான் எடுத்துக் காட்டிய சில நியாயங்களுக்காகத் தன்னையே அவர் மெச்சிக்கொண்டார். ஆனால் அவ்வளவு உடைத்துப் பேசியும் அக்காவுக்குப் பயன்படாததை நினைக்க அவர் வருந்தினர். அத்திம்பேர் வெங்கட சுப்பையரிடம் தன் மனோபாவங்களைக் கூறிவிடச் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். வேலைத் தொந்திரவு அதிகமாயிருக்கும் சமயத்தில் அவரிடம் இந்த அக்கப்போர்களை எடுத்துச் சொல்லவேண்டாம் என்று எண்ணினர். வெங்கிட சுப்பய்யர் சில தினங்கள் இரவு 8 மணிக்கு வீடு வந்து சேருவார். காலையில் வெகு அவசரமாக ஆபீஸுக்குப் புறப்படுவார். எப்போதுமே அவர் யாருடனும் அதிகமாய்க் கலகலப்புடன் பேசுபவரல்ல. அவரிடம் தனித்துப் பேசவேண்டுமேயானல், இரண்டு மூன்று தினங்கள் காத்திருந்துதான் அவகாசம் தேடவேண்டும். மாமா சிவராமன் சில தினங்கள் இருந்து பேச வேண்டியவற்றைப் பேசிவிட்டுத்தான் ஊருக்குப் போவதென்று தீர்மானித்துக்கொண்டார். காந்திமதியை ஸீதாராமன் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளுவதையாவது செல்லத்திற்கு ராமனாதனைத்தவிர வேறு வரன் பார்ப்பதையாவது அவர் மனம் அனுமதிக்கவில்லை. ராமனாதன் சில நடவடிக்கைகளில் தன்னைப்போலிருப்பதில் மாமா சிவராமன் திருப்தியடைந்தார். அதனாலேயே அவனுக்குச் செலவைக் கேட்காமல் ஒவ்வொரு சமயம் பணம் கொடுத்து வந்தார். காசை உதறி எறிகிறவன் உயர் பிறப்புப் பிறந்தவன் என்று மாமா சிவராமனுக்கு ஒரு அபிப்பிராயம். தான் கொடுத்ததைத் திருப்பிக்கேட்காமலிருப்பதும், தான் வாங்கினதைத் திருப்பிக்கொடுக்க மறந்துவிடுவதையும் அவர் ஒரு பெரிய ஹோதாவாக மதித்திருந்தார். சிறுபிள்ளைகளை யதேச்சையாய் விட்டுவிட்டு, அவர்களின்மீது அதிகாரம் செலுத்தாமலிருப்பது மட்டுமல்லாமல், அவர்களின் தேவைகளை மனக்களிப்புடன் பூர்த்தி செய்துகொடுப்பதே தந்தையரின் கடமை என்பது அவர் கொள்கை. ராமனாதன் முதல் நாள் இரவு தன்னுடன் சினிமாவுக்கு வராததுபற்றியும் பின்பு அவன் இரண்டாம் "பிளே"யிக்குப் போனானா, இல்லையா என்பது பற்றியும் விசாரித்து அறிந்துகொள்ளவேண்டியது அவருக்கு அவசியமாகத் தோன்றவில்லை. மாமா சிவராமன் தானும் தமாஷாகவிருப்பதுடன், பிறரையும் தமாஷாகவிருக்க அனுமதிக்கும் சுபாவமுடையவர். அவருக்குச் செல்லத்தினிடம் அதிக அன்பு. அவள் அவருடைய ஒரே பெண். அவளுக்குப்படிக்க ஊக்கமிருக்கும் வரையில் அவள் படிக்கட்டும் என்ற எண்ணத்துடன் அவள் பட்டணத்தில் சுகமாக உயரிய தர்பாரில் கொஞ்சகாலம் இருந்து அனுபவிக்கட்டும் என்ற எண்ணம்தான் அவளை அங்கு கொண்டு வந்துவிடும்படி செய்தது—செல்லம் படிப்பிலும் செல்வமுள்ள வாழ்விலும் குறைவில்லாமல் இருந்துவருவதுபற்றிச் சந்தோஷித்தார்.

மாமா சிவராமன் கையிலிருந்த 'நாட்டுவளமும், செய்நேர்த்தியும்' என்ற புஸ்தகத்திலிருந்து ஒரு தனிக்காகிதம் கீழே விழுந்தது. அதை அவர் எடுத்துப்பிரித்துப் பார்த்தார். அது ஒரு கடிதம் போல் காணப்பட்டது. முதல்

குறிப்பும் கீழ் கையெழுத்தும் அவரை ஊக்கப்படுத்தின: "அழகுச் செல்வத்திற்கு" என்று மேல் குறிப்பு எழுதப்பட்டிருந்தது. கீழே கையொப்பம் அதிக விந்தையாகவிருந்தது. "வெந்த உள்ளம்" என்று காணப்பட்டது. கடிதத்தின் மற்ற பாகமெல்லாம் பாட்டுப் போல் காணப்பட்டது. மாமா சிவராமனின் மனது அதில் துரிதமாய் ஈடுபட்டது. ஊரோ, தேதியோ ஒன்றையும் காணோம். எழுத்துக்கள் இடது பக்கம் சாய்த்து எழுதப்பட்டிருந்தன— எழுத்தடையாளம் கண்டுபிடிக்க முடியாமலிருப்பதற்காகப் போலும்! நுண்ணிய பேனா முனையால் லேசான கோடுகள் அதிகப் பிரகாசமில்லாத மையில் வரையப்பட்டிருந்தன— உள்ளத்தைக் கொள்ளையிட வந்த திருடனின் காலடி வைப்புப்போல், மாமாவின் உள்ளம் பல சங்கைகளுக்கும், பீதிகளுக்கும் ஆளானது. கடிதத்தைக் கூர்ந்து கவனித்துப் படிக்கலானார். எழுத்துக்கள் வேண்டுமென்றே அவசரத்தில் படிக்கமுடியாதபடி அமைக்கப் பெற்றிருந்தன. அடிகளின் முதல் எழுத்துக்கள் அழகாய் திட்டப் பட்டிருந்தன.

1. மருளும் மான்போல்
அழகிய விழியும்,
கார்முகிலளகம் சூழ்மதி
முகமும்,
திகழும் கோவைக்கனி
போலிதழும்,
சிறு நகை தவழும் சிக்கன
மொழியும்,
மதனுக்கம்பு களைந்தும் தந்து
வளம் பெற வைக்கும்
துடியிடை நங்காய்!

2. மண்ணில் வளரும் மணம்
தரும் மலரே!
பெண்ணே! பிறவிக் கடலுள்
மணியே!
வானில் மிளிரும் வளர் பிறை
மதியே!
வையகமனைத்து முய்யும்ரதியே
சந்ததமுன் பாலின் பக்கனவால்!
வந்தவனுதல் கண்டெனையேற்க!

3. அனலிற்கருகே வெண்
ணெய் யுருகும்
காந்தம் தன்னை இரும்பு
களணுகும்
முழு மதி கண்டால் கடலும்
பொங்கும்
மங்கையரெதிரில் மயங்கா
ரெவரோ?

4. காணுமல் நான் காதலித்
துன்னைத்
திராத்தாகம் விரைவில்
கொண்டேன்
கொஞ்சும் கடைக்கண் குளிரப்
பாராய்
தாராய் உன்தன் வாழ்க்கை
எனக்கே

5. ஊற்றுப் பெருக்கென உள்
ளம் துள்ளும்
காற்றும் மணமும் கலந்து
பொழியும்
தேனும் பாலும் தீஞ்சுவை
யளிக்கும்
சொல்லும் பொருளும் செழிக்
கச்சேரும்
அத்துவிதத்தின் சுத்தானந்தம்
நித்தமுமோங்கும் நிறைந்த
அன்பில்

6. அகவல் கவியா? மிகவல்
லவனு?
ஏனே என்தன் மடமை இதனில்?
பண்கள்பாடும் மெய்யன்பற்கு
அரைமதியணியும் அரனருள்
போலப்



"ஹிந்து" சொந்தக்காரர் ஸ்ரீ கே. கோபாலனின் குமாரர் சி. ஜி. கஸ்தூரிக்கும், ஸ்ரீரங்கம், முதல் திருமாளிகை ஸ்ரீ எஸ். ஆர். ரங்கஸ்வாமி தாதாசாரியார் குமாரி ஸௌ. கமலாவுக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

பாட்டின் பிழைகள் பொறுத்துக்கொள்வாய்!
கருணைபுரிவாய் தணிகையேற்க
"வெந்த உள்ளம்"

இதைப்படிக்கும்போது மாமா சிவராமன் வீரபத்ர ஸ்வரூபத்தை அடையலானார். எந்தப்பயல் இவ்வளவு துணிச்சலாய் தன் பெண்ணுக்குக் கடிதம் எழுதினது—அவனைக் கட்டி வைத்து நையப் புடைத்து ஒரு அடையாளத்தை செய்து அனுப்ப அவர் கைகள் துருதுருத்தன. அவர் எழுந்தார், உட்கார்ந்தார், நாற்காலியை கிர் என்று இழுத்துக்கொண்டார்—மறுபடி பின்னே தள்ளினார். டிராயரை படாரென்று மூடினார்—மறுபடி இழுத்தார். புஸ்தகங்களை தடதடவென்று கீழே தள்ளினார். மறுபடி இரண்டொன்றை பொறுக்கி எடுத்தார். வேறு லெட்டர்கள் இந்தமாதிரி இருக்குமோ என்று சில புஸ்தகங்கள், நோட்டுப்புஸ்தகங்கள் முதலியவற்றைப் பரிசோதித்தார். "வெந்த உள்ள"த்தின் லெட்டரை மறுபடி கையிலெடுத்து இரண்டொரு வரிகளை வாசித்தார். திடீரென்று எழுந்து, அக்கா சங்கரியிடம் செல்வதற்காக உள்ளே போனார். ஆனால் பக்கத்து வீட்டு ஸ்திரீ ஒருத்தி சங்கரியுடன் பேசிக்கொண்டிருந்ததால் திரும்பித் தன்னிடத்திற்கு வந்து உட்கார்ந்தார். செல்லம் வந்தவுடன் அவளை விசாரித்து வெகு கண்டிப்பாய் நடந்துகொள்வதென்று தீர்மானித்துக்கொண்டார். செல்லம் வர எத்தனை நாழியாகுமென்று தன்னையே கேட்டுக்கொண்டு கடிகாரத்தண்டை ஓடினார். மணி இன்னும் பன்னிரண்டு ஆகவில்லை. மாமா சிவராமனுக்கு லேசாய் தலைவலி கண்டது. மனம் குழம்பியதால் மயக்கம் போல் ஒரு நிலை தோன்றிற்று. அவர் முன்ஹால் சோபாவில் சாய்ந்தார். கண்களை அரைவாசி மூடிக்கொண்டு, ஏக்கத்தினால் அயர்ந்தார். அவருடைய கலவரம் நிறைந்து கனத்துப்போன தலையை வலது கை தாங்கிக்கொண்டது. இரண்டொரு நிமிஷங்கள் சூன்ய நிலையில் மனம் அமர்ந்தது. அப்போது மதுரப் பாட்டி அவர் சமீபம் வந்தாள்.

பாட்டி கொஞ்சநாழியாய் சிவராமனை கவனித்துக்கொண்டிருந்தாள். அவர் உள்ளே போய்த் திரும்பியதைப் பார்த்ததும், என்னவேண்டுமென்று விசாரிக்க நினைத்தாள். சிவராமனின் சோபாவருகில் வந்து மதுரப் பாட்டி மெதுவாக "தீர்த்தம் வேண்டுமா" என்று கேட்டாள். மாமா கண் திறந்து பாட்டியைக் கண்டதும், சுயம்பிரக்ஞையை வரவழைத்துக்கொண்டு "ஆமாம். கொஞ்சம் தீர்த்தம் கொண்டாருங்கள்" என்றார். "நீங்கள் உள்ளே போனதையும், திரும்பினதையும் பார்த்தேன், அதனால்தான் கேட்டேன்" என்று அந்தரங்க திருப்தியுடன் சொல்லிக்கொண்டு மதுரப்பாட்டி உள்ளே சென்று வெள்ளி கூஜா டம்ளர்களில் தீர்த்தம் கொணடு வந்து கொடுத்தாள். மாமா தீர்த்தம் அருந்திவிட்டுத் தன் வெற்றிலைப் பாக்குப் பெட்டியைத் தேடிக்கொண்டு செல்லத்தின் ரூமுக்குள் சென்றார். அங்கு "வெந்த உள்ள"த்தின் கடிதம் மேஜையின்மேல் பிரித்துக் கிடந்ததைப் பார்த்து அச்சங்கொண்டு அதை எடுத்து மடித்துப் பத்திரமாய் அந்த நாட்டு வளமும் செய்நேர்த்தியும் என்ற புஸ்தகத்தை டிராயருக்குள் வைத்துவிட்டு, வெற்றிலைப் பெட்டியுடன் வெளியில் வந்தார். மதுரப்பாட்டி ஹாலிலேயே நிற்பதுகண்டு அவள் தன்னுடன் பேசுவதற்கு ஆயத்தமாயிருப்பதுணர்ந்து, தனக்கும் பொழுதுபோக்கிற்காக அவளை வினவினார். "உள்ளே யார் புதுசாயிருக்கிறதே?"

(தொடரும்)



தொழில் ஸப்ளை மந்திரிசபை இலாகாவில் டெபுடி டைரக்டராயுள்ள ஸ்ரீ ஆர். பார்த்தசாரதியின் பெண்ணும் "மெயில்" பத்திரிகையின் உதவியாசிரிய நமான ஸௌ. ராஜலட்சுமிக்கும், இந்திய சர்க்கார் வர்த்தக இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீ ஒய். ஜி. பார்த்தசாரதிக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



திருவாங்கூர் சர்க்காரின் மாஜி பிரதமக் காரியதரிசி ராஜ்ய ஸேவாப் பிரவீண எம். கே. நீலகண்டய்யரின் சகோதரரும் குடந்தையில் டாக்டராயிருந்தவருமான எம். கே. சாம்பசிவனின் பெண் ஸ்ரீமதி லட்சுமிக்கும், ஷோலாப்பூர் ஜி. ஐ. பி. ரயில்வே ஸ்ரீ பி. நாகராஜய்யர் குமாரன் சி. சிவராமன், எம். எஸ். ஸி.,க்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

ஸ்தாபிதம் 1924
பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷ்டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

ப்ராங்கியல் - தகராறுகள்

விடாத இருமல் &

சுவாச கஷ்டங்களுக்கு உமக்கு பெப்ஸ் அவசியம்

தொண்டை, சுவாசப்பை தகராறுகளை நிவர்த்திசெய்ய நல்ல ருசியுள்ள பெப்ஸ் சிறந்தது. பெப்ஸை மென்றவுடன் அதிலுள்ள மருந்தும் கிருமிநாச சத்துக்களும் சுவாசத்துடன் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்கின்றன. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டையை சமனமூட்டி கிருமிகளையும் கொன்று, சளியை தளரச் செய்து வீக்கத்தைக் குறைத்து கிருமிகளை நாசம் செய்யும்.

பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

PEPS

கிருமி நாசி

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாருதீர்கள், பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனை ஆர். கிருஷ்ணு பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. **N. B.** 25 காலி உரை அனுப்பினல் 50—0-0-3 பொட்டலம் இனம்,

S. M. கிருஷ்ணு அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு.
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானல் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸ்லேன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினல் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி

R.M. நாராயணசாமி பிள்ளை

தன்வந்திரி வைத்தியசாலை,
பழனி. (S. I.)

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆட்டோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்
பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வத்ரம், ஸ்ரீ தன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை.

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 65,00,000.

கிளைகள் : { பம்பாய், அகமதாபாத், கல்கத்தா.

★

பிரதம ஏஜெண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House. Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No. 8314.

தரகரை நம்பினல் . . .

நீங்கள் மோசம் அடைவீர்கள்

வைரம் வாங்குவதில் மிதமிஞ்சி ஜாக்கிரதை யுள்ளவர் வியாபாரியின் நாணயத்தை நம்பாமல் மூன்ரும் மனிதரை நம்பினல் ஏமாற்றமடைவர்.

தரகர் தன்னுடைய நலனுக்கே பாடுபடுவார். சுய நலனுக்காக தனக்கு **சகாவான** வியாபாரியிடமே விகிதம் நிர்ணயித்துக்கொள்வார்.

★ புகழ் பெற்ற வியாபாரிகளிடம் நேருக்கு நேர் வியாபாரம் செய்வதே உங்களுக்கு நலனைத் தரும்.

அதிகமான வரும்படி கிடைக்கும் **இடத்திற்கே** அவர் வியாபாரத்துக்கு சிபார்சு செய்வார். அதனல் உங்களுக்கு சிறந்த ரகம் கிடைக்காது. உங்கள் நலன் பாதிக்கப்படும்.

ஸுரஜ்மல்ஸ்

50 வருஷப் புகழ்பெற்ற வைர வியாபாரிகள்.

313, நேதாஜி ரோட், :: சென்னை.